விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை (10.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327

## முகக் கவசம் இன்றி கூட்டத்தில் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

### சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் லசந்த



(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்ட கூட்டத்தில் முகக் கவசமின்றி வடமாகாண ஆளுநர் 19

### தாய்ப்பால் புரைக்கேறியதில்

## ஒரு மாதமேயான ஆண் குழந்தை மரணம்

### கரவெட்டி மேற்கில் சம்பவம்

(கரணவாய்)

தாய்ப்பால் புரைக்கேறியதில் ஒரு மாதமேயான ஆண குழநதை ஒன்று உயிரி 19

நீங்கள் வேலை தேடுபவரா?
வேலைவாய்ப்பு
இன்றைய வலம்புரி இல்
11ஆம் பக்கம் பார்க்க

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரி இல் தினசரி பிரசுரமாகிய
'கடல்புறா'
நெடுந்தொடர்
நாட்டின் இயல்பு நிலைக்கு பின்னர் தொடர்ந்து வெளிவரும்.

### நாட்டை முடக்குவதால் வைரஸ் கட்டுப்படாது

# கொரோனாவை தவிர்ப்பது பொதுமக்களின் கடமை

### கோவிட் ஒழிப்பு விசேட செயலணியில் ஜனாதிபதி



*(கொழும்பு)*

**கொரோனா தொற்றுவதிலிருந்து தவிர்த்திருப்பது பொதுமக்கள் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட பொறுப்பும் கடமையும் ஆகும்.**

**நாட்டை முடக்குவதால் மட்டும் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கோவிட் ஒழிப்பு விசேட செயலணி நேற்று கூடியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"நோய்த் தொற்றுக்கு மத்தியில் எமக்கு மேற்கொள்ள முடியுமான மாற்று வழிகள் 03 உள்ளன.

ஒன்று ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்து முழு நாட்டையும் முடக்குவது.

இரண்டாவது எதனையும் செய்யாதிருப்பது. மூன்றாவது நோயை கட்டுப்படுத்தும் அதே 19

## எதிர்வரும் 23ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பம்

### கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல அரச பாடசாலைகளும் எதிர்வரும் 23ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 19

### துரையப்பா விளையாட்டு மைதானம்

## சர்வதேச தரம் வாய்ந்ததாக விரைவில் மாற்றப்படும்

### யாழில் அமைச்சர் நாமல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம் சர்வதேச தரம் 19

### உரும்பிராயில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்ததில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உரும்பிராய் பகுதியில் 19

## கொரோனா தொற்றிவிடும் என்ற அச்சத்தில் விபரீத முடிவெடுத்த இருவர் உயிரிழப்பு

### தொற்றாளர்களை ஏற்றிச்சென்ற இ.போ.ச சாரதியும் உள்ளடக்கம்

(கொழும்பு)

கோவிட் - 19 நோய் காரணமாக அச்சம் மற்றும் பதற்றம் காரணமாக இரண்டு பேர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகலவத்தை மற்றும் ஜா-எலவைச் சேர்ந்த இரண்டு பேர் இவ்வாறு 19

## கீரிமலையில் வாந்தி எடுத்த இளம் யுவதி மரணம்

### மூளைக் காய்ச்சல் என தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மூளைக் காய்ச்சல் காரணமாக இளம் யுவதி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கீரிமலை கூவி 19

### கொரோனா பலி

## 36 ஆக உயர்வு

### நேற்றும் +321 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா நோய்த் தொற்றினால் பதிவான மரணங் 19

### திருநெல்வேலியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 19

### கடற்படையின் தேவைக்காக

## மண்டைதீவில் பொதுமகனின் காணி சுவீகரிக்க முயற்சி

### இன்று காணி அளவீடு செய்யப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மண்டைதீவு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக பொது 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## கெங்காதரம் யசோதரன்

(யசோ மில் உரிமையாளர் - நெடுங்கேணி)



வெடிவைத்தகல்லைப் பிறப்பிடமாகவும் நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரம் யசோதரன் நேற்று முன்தினம் (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கெங்காதரம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆனந்தராசா (ஐங்கரன் மாமா) - வள்ளியம்மா தம்பதியரின் மருமகனும் தர்சினியின் (ஆசிரியர்-நெடுங்கேணி ம.வி) அன்புக் கணவரும் கிளி/ கிளிநொச்சி ம.வி. மாணவிகளான அங்குழலி, அருள்நயனி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிஜா (உப அதிபர் - நெடுங்கேணி மகாவித்தியாலயம் ), சுகந்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் உமாதரன் (இலண்டன்), வானதி (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோகனராசா (இலண்டன்), தாட்சாயினி (பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் - கிளிநொச்சி), காலஞ்சென்ற குகராசா மற்றும் அரவிந்தராசா (இலண்டன்), கேதீஸ்வரன், சற்குணசிங்கம் (பிரான்ஸ்), வசந்திமலர் (இலண்டன்), சுரேஸ்குமார் (இலண்டன்), அறிவு (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் புஸ்பாகரன் (பிரதேச செயலகம் - கண்டாவளை), தயாளினி (இலண்டன்), ஷாஷ் (இலண்டன்) ஆகியோரின் சகலனும் சைந்தவி, மாதவி, கஜானனன், கஜனிகா, கஜனிகன், சகானா, தாரகன், சாரங்கி, அனந்திகா, அக்ஷயா, அயிஷா, அயான் ஆகியோரின் மாமனும் கடாட்ஷன், கோபிநாத், கடம்பன், காருண்யன், அபிநயா, குபேரன், ஆதவன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சேனப்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4596)

நெடுங்கேணி. 077 087 9214. 077 128 3470 077 356 0785 தகவல்:- குடும்பத்தினர்

# சந்தையில் பாரம் தூக்குபவர்களால் கொரோனா பரவும் வாய்ப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண

(கொழும்பு)

கொழும்பு மெனிங் சந்தையில் பாரந் தூக்குபவர்கள் (நாட்டாமைகள்) மீதான பிசிஆர் சோதனை முடியும் வரை, சந்தை மீளத்திறக்கப்படாது என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பாரந்தூக்குபவர்கள் பலர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று (9) காலை மெனிங் சந்தை திறக்க திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், சந்தையுடன் தொடர்புடைய அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து, சந்தையை திறக்கும் முடிவு ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் சந்தை மூடப்பட்டிருப்பதாகவும், பொலிஸ், சுகாதார அதிகாரிகள் மற்றும் உளவுத்துறை சேவைகள் பாரந்தூக்குபவர்கள் மத்தியில் கொரோனா வைரஸ் பரவுவதை உறுதி செய்துள்ளதாகவும், சுகாதார வழிகாட்டலுக்கமைய சரியான நேரத்தில் சந்தை திறக்கப்படும் என்றும் கூறினார். (ம-03)

# உர இறக்குமதி மற்றும் விநியோகத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குக

## ஜனாதிபதி செயலணித் தலைவர் - பசில்

(கொழும்பு)

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணி அதன் தலைவர் பசில் ராஜபக்ஸவின் தலைமையில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது.

உரம் இறக்குமதி மற்றும் விநியோகத்தை துரிதப்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

பெரும்போகத்திற்கு தேவையான உரத்தை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்குமாறும் பசில் ராஜபக்ஸ இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


விவசாயிகளுக்கு தேவையான நீர் மற்றும் உரத்தை முறையாக விநியோகிப்பதன் மூலம் குறுகிய காலத்தில் உற்பத்தி அளவை அதிகரிக்க முடியும் எனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருடத்திற்கு 7,08,910 மெட்ரிக் தொன் உரம் தேவைப்படுகின்றமையும் இதன்போது தெரியவந்துள்ளது. (ம-03)

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

உலகம் போற்றும் உத்தமராய்
உறவுகளுக்கு கரம் கொடுக்கும் தலைவனாய்
ஜனநாயகத்தின் தோழனாய்
வட தேச மக்களின் விடிவெள்ளியாய்
எண்ணில் அடங்காத சேவை எத்தனை
எழில் பொங்கும் உம் கரங்களால்
மக்களோடு மக்களாக மக்களுக்காக
நாடாளும் மன்றம்தனில் நாயகத்தின் வடிவமாய்
காலைக் கதிரவன் வந்து உதித்து புன்னகைப்பது போல
எங்கள் மாண்புமிகு தலைவனும் ஈழமக்கள் ஜனநாயக
கட்சியின் செயலாளர் நாயகமும்
கடற்தொழில்துறை அமைச்சருமாகிய

(4593)



## கே.என் டக்ளஸ் தேவானந்தா

அவர்களின் இன்றைய பொன்னான நாளில் எம் கரங்கள் உயர வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.

HAPPY BIRTHDAY

வாழ்த்துவோர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




(C-658)

## திரு. கிறிஸ்தோபர் கமலராஜன்

( SLEAS - I )


எமது வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர்
திரு. கி. கமலராஜன்
அவர்கள் 2019.03.12 முதல்
இலங்கை கல்வி நிர்வாக சேவையின்
SLEAS தரம் I இற்கு பதவி உயர்வு
பெற்றுள்ளமையைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி

# தாம் தொற்றுக்குள்ளாகி இருப்பது தெரியாமலே

# பலர் சமூகத்தில் உள்ளனர்

## அடையாளம் காண்பது அவசியம்




**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதை அறியாமலேயே சமூகத்தில் இருப்பவர்களை விரைவாக இனங்காண வேண்டிய தேவையுள்ளது என்று முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய வலியுறுத்தியிருக்கிறார்.**

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது.

தமக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதை அறியாமலேயே துரதிர்ஷ்டவசமாக சிலர் உயிரிழந்திருக்கிறார்கள். இவ்வாறாக வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதை விரைவாக இனங்கண்டு, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய பலர் சமூகத்தில் இருப்பதற்கான வாய்ப்புள்ளது. தாம் வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதை அறியாத ஒருவர் அதை ஏனையவர்களுக்குப் பரப்புவதிலிருந்து எவ்வாறு விலகியிருக்க முடியும்? என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அதேபோன்று மரக்கறிகள் உள்ளிட்ட உணவுப்பொருட்களை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் அனர்த்த முகாமைத்துவ அடிப்படையிலான முறையான செயற்றிட்டமொன்றை அரசாங்கம் பின்பற்றுவது அவசியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். (நி-4)



பொன்னாலை வீதி கல்லுண்டாயில் அமைக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், க.மகேசன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:- கஜிதன்)

## இதுவரை 6 இலட்சம் பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் சுமார் ஆறு லட்சம் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நாடு முழுவதிலும் சுமார் பத்தாயிரத்து 632 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக கொரோனா நோய்த் தொற்று பரம்பலை கட்டுப்படுத்தும் தேசிய நிலையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நாட்டில் மொத்தமாக இதுவரையில் 6 இலட்சத்து 2 ஆயிரத்து 850 பி.சி.ஆர்.பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

## அமெரிக்காவுக்கு சந்திரிகா வாழ்த்து

(கொழும்பு)

அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் கமலா ஹறிஸ்க்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவரின் வெற்றி தெற்காசியப் பெண்களுக்கும் உலகப் பெண்களுக்கும் பெருமை தருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பிடனுக்கும் கமலா ஹறிஸ்க்கும் டுவிட்டர் பதிவின் மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கும் குமாரதுங்க அமெரிக்க மக்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்.

மன்னர்கள் பைத்தியக்காரர்களாக மாறும் போது ஜனநாயகமும் அதன் செயற்பாடுகளுமே மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரே பாதுகாப்பாகும். ஜனநாயக நிறுவனங்கள் அவற்றின் சுதந்திரத்துக்கும் சட்டப்படியான அவற்றின் செயற்பாட்டுக்கும் வரும் சகல அச்சுறுத்தல்களையும் கடுமையாக எதிர்த்து நின்று வெற்றி கொள்ள வேண்டும்.

அதை அமெரிக்கா நிரூபித்திருக்கிறது என்றும் அவர் தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)



மன்னார் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட நிர்வாக கிராம உத்தியோகத்தர் சின்னத்துரை விஜியேந்திரனின் கொலை தொடர்பில் விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்கக்கோரி யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கமானது நேற்று கறுப்புப்பட்டி அணிந்து கடமையில் ஈடுபட்டது. (படம்:- மகாலிங்கம்)

## 50 பேர் கைது

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது நிர்ணய விலைக்கு அதிக விலையில், அரிசி விற்பனையில் ஈடுபட்ட 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## மனோவின் அறிவிப்பு

(கொழும்பு)



தமிழ் பேசும் மக்களுக்கு சமத்துவ தீர்வை அரசாங்கம் வழங்கினால்தான் நான் வீட்டுக்குப் போவேன் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், "அரசாங்கத்தோடு இணைய எனக்கு அழைப்பு விடுக்கத் தேவையில்லை. தமிழ் மக்களுக்கு சமத்துவத் தீர்வை அரசாங்கம் வழங்கட்டும். அதன் பின் நான் வீட்டுக்குப் போய் விடுகிறேன்." என தெரிவித்தார். (ஜ-4)

## விசேட பூஜையில் பிரதமர்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கொழும்பு வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இடம் பெற்ற ஆசீர்வாத பூஜையில் கலந்துகொண்டார்.

இந்த பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றன. (ஜ-4)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரும், வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் நேற்று திங்கட்கிழமை காலை நெல்லியடி நகரிலும் பருத்தித்துறை நகரிலும் கொரோனா விழிப்புணர்வு பிரசுரங்களையும் முகக் கவசங்களையும் பொதுமக்களுக்கு வழங்கினார். (படம்:- மகாலிங்கம்)

# மீன் பிடிப்படகில் தீ



(கொழும்பு)

தெற்கு கடற் பகுதியில் மீன் பிடிப் படகொன்றில் பல நாட்கள் ஏற்பட்ட தீயை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய கடற்படையினர் கடந்த சனிக்கிழமை குறித்த மீன்பிடிப் படகு மற்றும் மீனவர்களையும் பாதுகாப்பாக காலித் துறைமுகத்திற்கு அழைத்து வந்தனர்.

அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகத்தை விட்டு வெளியேறிய 'ஜனத் ஐ' (IMUL-A-0545-GLE) என்ற மீன்பிடிப் படகு கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவேளை, கொக்கலை கடற்பகுதியில் வைத்த அதன் இயந்திர அறையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியில் ரோந்துப் பணியில் இருந்த தெற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட ஒரு கடலோர கண்காணிப்பு ரோந்து படகு மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தீ விபத்தை அவதானித்துள்ளது.

அதன்படி, கடலோர கண்காணிப்பு ரோந்து படகு மீன்பிடிப் படகில் பல நாட்கள் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தீயை அணைக்கும் நடவடிக்கைகளை அதிகரிக்க காலி துறைமுகத்திலிருந்து ஒரு துரித தாக்குதல் படகொன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, துரித தாக்குதல் படகு மற்றும் கடலோர பாதுகாப்பு படகு ஆகியவற்றின் கடற்படை வீரர்களினால் இந்த தீயை வெற்றிகரமாக அணைக்க முடிந்தது.

மேலும், கொவிட் 19 பரவுவதைத் தடுக்க வழங்கப்பட்ட சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நடவடிக்கைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-4)

# புற்று நோயாளர்களுக்காக விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

புற்று நோயாளர்களுக்கு சுகாதார அமைச்சு விசேட வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இதற்கமைய புற்று நோயாளர்கள் மகரகமவில் அமைந்துள்ள அபெக் ஷா வைத்திய சாலைக்கு சிகிச்சைகளுக்காக வருகைதர வேண்டாம் என சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் ஔடதங்களை பெற்றுக்கொடுக்கவும் விசேட வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-4)

# குவைத்தில் சிக்கியுள்ள பணிப்பெண்கள் அவலக்குரல்

(கொழும்பு)

குவைத் நாட்டில் கடந்த 7 மாதங்களாக நிர்க்கதியாகியுள்ள எங்களை மீட்டெடுத்து துயர் துடையுங்கள் என இலங்கையிலிருந்து குவைத் நாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக சென்று அங்கிருந்து நாடு திரும்ப முடியாமல் சிக்கித் தவிக்கும் இலங்கைப் பணிப்பெண்கள் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குவைத்தில் சிக்கியுள்ள இலங்கைப் பணிப்பெண்கள் தமது அவலக்குரலுடன் காணொளியொன்றையும் வெளியிட்டு அதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தம்மை மீட்டெடுக்குமாறு வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

அந்தக் காணொளியில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் ஜனாதிபதியிடம் உருக்கமாக இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர். (ஐ-4)

# 17 தனியார் பஸ்களே சேவையில்

(கொழும்பு)

கடந்த ஒரு மாதமாக கம்பஹா மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு நேற்று அதிகாலை நீக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் தமது சாதாரண பயணங்களை மேற்கொள்ள போதியளவு தனியார் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக கம்பஹா மாவட்டத்தில் ஆயிரம் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடும் நிலையில், நேற்று 17 தனியார் பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுவதாக, போக்குவரத்து அதிகாரசபையின் கம்பஹா மாவட்ட முகாமையாளர் திலக் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ-4)

# ஐக்கிய அரபு இராச்சியத்தை சென்றடைந்த நியூடயமண்ட் கப்பல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் தீப்பரவல் ஏற்பட்ட நியூ டயமண்ட் கப்பல் இந்தியப் பெருங்கடல் முழுவதுமான நீண்ட பயணத்திற்குப் பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு சென்றுள்ளது.

குறித்த கப்பல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை புஜைராவில் நங்கூரமிட்டது.

குவைத்தின் மீனா அல் அஹ்மதி துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்கு 2இலட்சத்து 70ஆயிரம் மெட்ரிக் தொன் கச்சா எண்ணெயை கொண்டு சென்று கொண்டிருந்த குறித்த கப்பல்,இலங்கையின் கிழக்கு கடல்பகுதியில்2020 செப்டெம்பர் 3 ஆம் திகதி தீ விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கொரோனா தொடர்பில் மக்கள் மத்தியில் குழப்பநிலை

(கொழும்பு)



நோய்த் தொற்று தொடர்பில் சுகாதாரத்துறையின் உயர் அதிகாரிகள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் இதனால் மக்கள் மத்தியில் குழப்ப நிலைமை உருவாகியுள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று பரம்பல் தொடர்பிலான மெய்யான நிலைமையையும், அதனை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா சவால் குறித்த நீண்டகால தீர்வுத் திட்டங்கள் குறித்து சுகாதார அமைச்சர் கவனம் செலுத்தத் தவறியுள்ளதாகவும் குறுகிய கால தீர்வுகளே வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# மதுபான விற்பனை 15 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் மதுபான விற்பனையில் ஈடுபட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.

போதையற்ற நாட்டினை உருவாக்கும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம் பல்வேறு சுற்றிவளைப்புகள், சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்கீழ் நேற்று முன்தினம் மாலை வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கச்சக்கொடி சுவாமி மலை பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு உற்பத்திக்கான பெருமளவு கோடா கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இதேபோன்று கடந்த மூன்று தினங்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது கிரான், கச்சக்கொடி, களுவன்கேணி, வாழைச்சேனை, செட்டிபாளையம் பகுதியில் கசிப்பு விற்பனை, சட்ட விரோத கள் விற்பனை மற்றும் கசிப்பு உற்பத்தி ஆகியவற்றுடன் தொடர்புபட்ட 14 பேர் கைது செய்யப்பட்டனர். (ஐ-4)

# கைதிகளின் எண்ணிக்கை குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டமா அதிபருக்குஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ-4)

# மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது இலக்கு



(கண்டி)

மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது இலக்கு. அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சில விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் "சௌபாக்கிய நோக்கு" எனும் எண்ணக்கருவுக்கமைய புறநெகும திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா பிரதேச சபை பல்நோக்கு கட்டடத்தின் திறப்பு விழா நேற்று திங்கட்கிழமை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளது.

எனவே, அனைவரும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை முழுமையாக பின்பற்றி வாழவேண்டும். கட்டாயம் முகக்கவசம் அணியவும், சுகாதார நடைமுறைகளை எவராவது பின்பற்ற மறுத்தால் அவர்களுக்கு நிலைமையை தெளிவுபடுத்தவும். அப்போதுதான் கொரோனா சவாலை எதிர்கொள்ள முடியும்.

அதேவேளை, வெளியில் இருந்து தோட்டப்பகுதிகளுக்கு வருபவர்கள் தொடர்பில் அவதானமாகவே இருக்க வேண்டும்.

அவ்வாறு வருபவர்கள் தோட்டங்களில் உரிய தரப்புகளிடம் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

சிலர் தனிமைப்படுத்தல் நடைமுறையைச் சிறை தண்டனைபோல் நினைக்கின்றனர். அவ்வாறு அல்ல, உங்களின் பாதுகாப்புக்காகவும், ஏனையோரின் பாதுகாப்புக்காகவுமே தனிமைப்படுத்தல் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, அதற்கு அஞ்சவேண்டியதில்லை. சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்புகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கவும்.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் நிச்சயம் சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்போம். "என தெரிவித்தார். (ஜ-4)

# பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாது



(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நேற்று அதிகாலை 5 மணியுடன் நீக்கப்பட்டுள்ள போதிலும் நாளாந்த நடவடிக்கைகள் வழமை போன்று இடம் பெறவில்லை என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பயணிகள் போக்குவரத்து நேற்று முற்பகல் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் மிகவும் குறைந்த அளவிலான மக்களே பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தியிருந்தனர்.

எனினும் பல பகுதிகளில் சுகாதார பாதுகாப்பு முறைமையை பின்பற்றி மக்கள் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடவில்லை. மேலும் பொதுப் போக்குவரத்தில் குறைந்தளவிலேயே இடம் பெற்றதாகவும், அலுவலக புகையிரத சேவைகளுக்காக 48 புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும், புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

கரவெட்டியாறு வயற் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உழவு இயந்திரம் தடம் புரண்டதில் 18 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

மற்றுமொரு இளைஞர் படுகாயம் அடைந்தார். (ஜ)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2162

**லது**

ஆடு வாங்க லோன் கேக்கிறிங்களே ஏதாவது முன்னனுபவம் இருக்கா...!



இருக்கு சார் வாரத்தில மூன்று நாள் மட்டன் சாப்பிடுவன்...!

**மீரா**


தீபாவளிக்கு என்ன வேனும் என்னாலும் நான் செய்து தாரன்...!



ரி.வி யில் பார்த்தன் நெட்டுல பார்த்தன் எண்டு ஏதாவது செய்ய ஆரம்பிச்ச கொலை விழும்...!

**சந்தியா**

உலகத்தில போட்டி பொறாமை இல்லாத வேலை ஒண்னு இருக்கு என்றால் அது மாடு மேய்க்கிறது மட்டும் தான்



**கவிசாந்**




**நினுசா**

பேசாம கடன் வாங்கி தீபாவளியை ஓட்டிரலாமா...!



ஏய் ஆல்றெடி நம்ம வாழ்க்கை கடன்ல தான் ஓடிக்கிட்டு இருக்கு...!

**கௌசல்யா**

தொன்னூறுகளில் பள்ளி பருவ ஆசைகள்...

அஞ்சாவதிலிருந்து ஆறாவதுக்கு போக போறம்



அய்யா இனி பேனையால எழுதப் போறம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# துரையப்பா விளையாட்டரங்கை பார்வையிட்ட நாமல்



(யாழ்ப்பாணம்)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தினை பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்குழுக் கூட்டத்தில் பங்கேற்க நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இளைஞர் மற்றும்விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்றுக் காலை துரையப்பா விளையாட்டு மைதானத்தைப் பார்வையிட்டார்.

குறித்த விஜயத்தின் போது, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்தேனுகவிதானகமகே, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# 10 ஆவது தடவையாக இரத்ததான முகாம்



(குப்பிழான்)

"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியுடன் மாற்றத்திற்கான மாவட்ட இளைஞர் பேரவை மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் என்பன இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் வடக்கு கிராமிய உழைப்பாளர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் இரத்ததான முகாமில் 75 இளைஞர்கள் மழைக்கு மத்தியிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கி உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கினர். இவர்களுள் இரண்டு யுவதிகளும் அடங்குவர்.

குறித்த இரத்ததான முகாமில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் நேரடியாக கலந்து கொண்டு குருதி பெற்றுக் கொண்டனர்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் உரிய அனுமதிகளுடனும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் மேற்படி இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதேவேளை, "விதையனைத்தும் விருட்சமே இளைஞரணி" பொது அமைப்புக்களையும் இணைத்துக் கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் மாத்திரம் இதுவரை பத்து விசேட இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளனர்.

இதில் சராசரியாக ஒவ்வொரு முகாமிலும் 55 பேர் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். 500 குருதிக் கொடைகளைக் கடந்தமைக்காக மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (5-4-18-33)




# சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக் குழு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதன் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



குறித்த கலந்துரையாடலில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் , யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூ.கேதீஸ்வரன், முப்படைகளின் பிரதானிகள், பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் சமூக கட்டமைப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

1000 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக தர முயர்த்தி அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் முதற்கட்டமாக 10 பாடசாலைகளும் இரண்டாம் கட்டமாக 16 பாடசாலைகளும் உள்வாங்கப்பட்டு 2950 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 02 தேசியப் பாடசாலைகள் உள்ள நிலையில் முதல் கட்டத்தில் 02 பாடசாலைகளும் இரண்டாம் கட்டத்தில் 6 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டு 900 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் இராஜாங்க அமைச்சினால் ஜப்பான், கொரியா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி இளைஞர், யுவதிகளை அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி இளைஞர், யுவதிகளும் உள்வாங்கப்பட்டு மொழி ரீதியான பயிற்சிகளும் வெளிநாட்டு பணியாளர்களுக்கான நலனோம்பு நடவடிக்கைகளும் குறித்த இரு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து சுகாதார துறைகள் சம்பந்தமான தேவைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதில் அங்கஜன் இராமநாதனால் நெடுந்தீவு வைத்திய மற்றும் சுகாதார பணிமனைக்கு போக்குவரத்து வசதிகள் தொடர்பிலும் ஆளணி பற்றாக்குறை தொடர்பிலும் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டது.

இது மட்டுமன்றி பல்வகை துறைகள் சார்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (5-4)

# அனைத்து மக்களிடமும் தவிசாளரின் வேண்டுகோள்

(சாவகச்சேரி)


தற்போது நாட்டில் கொரோனா தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில் பொதுமக்கள் அனைவரும் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் அத்தியாவசியத் தேவை ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் வீட்டில் இருந்து ஒருவர் வெளியே சென்று பின்னர் தேவை முடிந்தவுடன் வீடுகளுக்குள் முடங்க வேண்டும்.

அத்துடன் சந்தை, நூலகம் உள்ளிட்ட அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பொது இடங்களுக்கு செல்லும் போது சமூக இடைவெளியைப் பின்பற்றுவதுடன், ஒதுக்கப்பட்ட இடங்களில் கைகளை தவறாது கழுவி, முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்.

பொதுமக்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் போதும், திரும்பி வரும் போதும் சுகாதார பகுதியினருக்கு தெரியப்படுத்தி உரிய சுகாதார ஆலோசனைகளைப் பெற்று நோய்த் தொற்றில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)



**யாழ்.மாநகர சபை 26ம் வட்டாரத்தில் அமைந்துள்ள நான்காம் குறுக்குத் தெரு கடற்கரை வீதியில் அமைந்துள்ள பெரிய வாய்க்கால் நீண்ட காலத்தின் பின் அவ்வாய்க்கால் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.** (படம்: ஏனஸ்ட்)

# குணமடைந்தோர் 8880

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து நேற்று முன்தினம் மேலும் 595 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 880 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 929 ஆக காணப்படுகின்றது. இதில் 5 ஆயிரத்து 14 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதே வேளை 297 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனா தொற்றினால் இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பெண் கைதிக்கு கொரோனா

(மாத்தறை)

மாத்தறை சிறைச்சாலையில் உள்ள பெண் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பெண் கைதி கம்புருகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் கைதி கடந்த முதலாம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து மாத்தறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மாத்தறையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் மூலம் அவருக்கு கொரோனா தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாடசாலை பாடங்கள் வீட்டுக்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் மாணவர்களின் கல்வி நடவடிக்கையை தொலைக்காட்சி, வானொலி உள்ளிட்ட ஊடகங்களின் வாயிலாக முன்னெடுக்கும் நடவடிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதுடன் அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களுடன் இதுபற்றி கலந்துரையாடியுள்ளதாக கல்வியமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதற்கமைய இந்த பாடத்திட்டங்கள் மூன்று மொழிகளிலும் கற்பிக்கப்படவுள்ளன.

கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் முறைமை தொடர்பிலான தகவல்கள் கல்வியமைச்சினால் அறிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது. (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. விவசாயம்
எதிர்பார்ப்பு: படித்த பெண். சாதாரண தொழில் உடையவர் விரும்பத்தக்கது.
தொ.இ: B/11376

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: சூரி,செவ் 1 இல்
தகைமை/தொழில்: HNDA, ஜேர்மனியில் வேலை செய்கின்றார். PR இல்லை.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் பெண் மட்டும்.
தொ.இ: B/11377

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 14 சூரி,செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியர், பிரதி அதிபர்.
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11378

பிறப்பு: 1987 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: சூரி,செவ் 1 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. Sales Manager. (Private Show room)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11380

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 38 1/2 செவ் 4 இல்
உயரம்: 5.6
தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்
தொ.இ: G/1591

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 32 1/2 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: M.Sc in Pharmacology. Pharmacy (UK)
எதிர்பார்ப்பு: மணமகளின் தகமைக்கேற்ற மணமகன். வெளிநாடு மட்டும்.
தொ.இ: G/1599

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம் கி.பா: 20 செவ் 4 இல்
உயரம்: 5.2
தகைமை/தொழில்: Banking Course. வங்கியாளர்.
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர்.
தொ.இ: G/1604

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 34 செவ் 9 இல்
உயரம்: 5.2
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்.
தொ.இ: G/1613

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ.து.)-கிளிநொச்சி

## பதவி வெற்றிடங்கள்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. பதவி - களஞ்சிய முகாமையாளர் - 208/16
சம்பளஅளவுத்திட்டம் - 15135-120X10-135X10-17685.
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப் பத்திரம் / க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம் /கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி.

2. பதவி - விற்பனை உதவியாளர் - 308/15
சம்பளஅளவுத்திட்டம் - 15545-130X10-140X10-18245.
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரம் / க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி.

03. பதவி - சாரதி - 312/13
சம்பள அளவுத்திட்டம் - 16365-140X10-150X10-19265.
தகைமைகள்:-
அ) 05 ஆம் தர கல்விச்சான்றிதழுடன் பேருந்து/லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரசாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

04. பதவி - எரிபொருள் நிரப்புனர் - 313/16
சம்பள அளவுத்திட்டம் - 15135-120X10-135X10-17685.
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்
அல்லது
ஆ) 08 ஆம் தர கல்விச்சான்றிதழ்.

பதவி - வாகன சுத்திகரிப்பாளர் - 314/16
05. சம்பள அளவுத்திட்டம் - 15135-120X10-135X10-17685.
தகைமைகள்:-
அ) கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்
அல்லது
ஆ) 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

06. பதவி - காவலாளி - 315/17
சம்பளஅளவுத்திட்டம் - 14725-115X10-130X10-17175.
தகைமைகள்:-
அ) 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

- வயதெல்லை :- 18-45(சங்கப்பணியாளருக்கு இவ்வயதெல்லை பொருந்தாது)
- விண்ணப்ப முடிவுத்திகதி :- 25.11.2020

ஏனைய விபரங்கள் :-

- இப்பதவிகளுக்குரிய அடிப்படை சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித் தகைமை சான்றிதழ், சேவைத் தகைமைச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து, **தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம் கிளிநொச்சி** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ **25.11.2020ம்** திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

(C-656)

**திரு.ச.மோகனபவன், தலைவர்,**
**கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்(வ.து), கிளிநொச்சி.**


# மோட்டார் குண்டு மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றாணமடு, மாலையர்கட்டுப் பிரதேசத்தில் மோட்டார் ரகக் குண்டொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த பிரதேசத்தில் வயல் வேலைக்குச் சென்ற நபரொருவர், வாய்க்காலில் மேற்படி குண்டைக் கண்டு, பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, குண்டு மீட்கப்பட்டது. (ஜ-4)

# காற்றினால் வீடு சேதம் அந்தரிக்கும் குடும்பம்



(முறிகண்டி)

கிளிநொச்சி பெரியபரந்தன் டீ5 கிராமத்தில் நேற்று முன் தினம் இரவு வீசிய காற்றினால் குடும்பம் ஒன்று வசித்து வந்த தற்காலிக வீடு சேதமடைந்து குறித்த இக்குடும்பத்தினர் ஆட்டுக் கொட்டிலில் தற்போது தங்கியுள்ளனர்.


நேற்று முன்தினம் இரவு பெய்த மழையுடன் கூடிய காற்று காரணமாக பெரிய பரந்தன் பகுதியில் மூன்று பிள்ளைகளுடன் வசித்த குடும்பத்தின் தற்காலிக வீட்டின் கூரை காற்றினால் பிடுங்கி எறியப்பட்டுள்ள நிலையில் தற்போது காணியில் உள்ள ஆட்டுக்கொட்டில் ஒன்றில் தங்கியுள்ளனர்.

அத்தோடு அப்பிரதேசத்தில் வேம்பு ஒன்று முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-100)

# தீப்பற்றி எரிந்த ஹாட்வெயார் நிலையம்

## பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதம்



(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிகுளம் நகரப்பகுதியில் அமைந்துள்ள ஹாட்வெயார் நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இத் தீ விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

செட்டிகுளம் நகரில் அமைந்துள்ள ஹாட்வெயார் பொருட்கள் விற்பனையகம் ஒன்று காலை 7 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்த பொது மக்கள் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டதுடன் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கும் தகவலை வழங்கினர்.

விரைந்து செயற்பட்டு குறித்த இடத்திற்குச் சென்ற நகர சபை தீயணைப்பு பிரிவினர் தீயினை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து காரணமாக பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

மின்சார ஒழுக்கு காரணமாக இத் தீவிபத்து சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என செட்டிகுளம் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதுடன், தடயவியல் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டுமேலதிக விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளன.(5-4-250)

# முல்லை.மாவட்ட விவசாயிகள் பிரச்சினை; ஆளுநருக்கு மனித உரிமை ஆணைக்குழு கடிதம்

(மன்னார்)

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் அரச காணிகளிலும் மற்றும் உறுதிக் காணிகளிலும் தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த விவசாயிகள் அண்மைக்காலமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள காணிப் பிணக்கு விசாரணை செயற்பாடுகளால் அவர்களது விவசாய நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் அவர்களது விவசாய நடவடிக்கைகள் முற்றாக பாதிப்படைந்துள்ளதுடன் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகவும் தெரிவித்த அப்பகுதி மக்கள் காணி தொடர்பான பிணக்குத் தீரும் வரை விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரி வவுனியா மனித உரிமை காரியாலயத்தில் முறையிட்டுள்ளனர்.

இதையடுத்துமனிதவுரிமை ஆணைக்குழு வடமாகாண ஆளுநருக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.


குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், மாந்தை கிழக்கு பகுதியில் யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் அநேக விவசாயிகள் உறுதிக்காணிகளிலும் அரச காணிகளிலும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த நிலையில் கடந்த சில மாதங்களாக பிரதேச செயலகத்தின் ஊடாக அவ்வாறு விவசாய செய்கைகளை மேற்கொண்டு வந்த நிலங்களுக்கு பிணக்குள்ளதாக தெரிவித்து விவசாயத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரச காணிகளிற்கு உறுதி வைத்திருக்கும் வேறு ஒரு தரப்பினருக்கும் மாத்திரம் விவசாய செய்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒழுங்கான தீர்வைப் பெற்றுத்தர கோரி மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியும் சட்டத்தரணியுமான வசந்தராஜாவின் கவனத்திற்கொண்டுவந்ததைத் தொடர்ந்து குறித்த பிரச்சினை வவுனியாமனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரியதர்சன ஊடாக மேலதிக விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அவ் விசாரணைகளின் அடிப்படையில் குறித்த பிணக்கானது தீர்க்கப்படும் வரை விவசாய திணைக்களத்தினூடாக பாதிக்கப்பட்ட விவசாயிகளிற்கு தற்காலிகமாக குறித்த பிரதேச செயலகத்தினால் விவசாயத்திற்கு தடைசெய்யப்பட்ட விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குமாறு வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவினால் அவசர கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (5-4-285)

# டிப்பர்-ஆட்டோ விபத்து மூவர் படுகாயம்



(அக்கராயன்)கிளிநொச்சி ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி வயைக்கல்வி அலுவலகம் அமைந்துள்ள பகுதி ஏ-9 வீதியில் பூநகரியிலிருந்து கிளிநொச்சிக்கு வந்துகொண்டிருந்த டிப்பருடன் பின்னால் வந்த ஆட்டோ மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இதில் ஆட்டோவில் பயணித்த சிறுவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

காயமடைந் தவர்கள் கிளிநொச்சி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-35)





**நாட்டு மக்களின் நலம் வேண்டி Covid 19 எனும் கொடிய நோயில் இருந்து இனம், மதம், மொழி, கடந்து அனைத்து மக்களும் நோயில் இருந்து விடுபடவும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வெகு விரைவில் குணமடையவும் கிளிநொச்சி இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் நேற்று முன்தினம் விஷேட பூஜைகளும் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.**

**(படங்கள்:- தேவானந்தன்)**

## இராசிபலன்

10.11.2020
ஐப்பசி 25, செவ்வாய்க்கிழமை,
தசமி முன்னிரவு 10.58 மணிவரை
பூரம் பின்னிரவு 2.54 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சந்திராஷ்டமம் - அவிட்டம்
சித்தாமிர்தம்

வளவன்


மேஷம்

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பிள்ளைகள் வழியில் பெருமையடையும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

பணிபுரியும் இடத்தில் பெயரும், புகழும் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வாகன சுகமுண்டு, சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.


மிதுனம்

பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.


சிம்மம்

குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகு தியான நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.


கன்னி

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், தேவையற்ற மனக்குறைகளைத் தவிப்பது நல்லது, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.


துலாம்

திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.


தனுசு

தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், புத்தி சாதுர்யமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள்.


மகரம்

பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனமெடுப்பது நல்லது.


கும்பம்

தொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், நண்பர்களின் சந்திப்பில் பரவசமடைவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மீனம்

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

உன் அன்பைத் தேவையுள்ளவர்களுக்கு மட்டும் கொடு

# உலக சுகாதார அமைப்பிலிருந்து ஆன்டிபயோடிக் சோதனை கருவிகள்

(கொழும்பு)

**கொவிட் தொற்றாளர்களை விரைவாக அடையாளம் காண்பதற்காக பயன்படுத்தப்படும் உடனடி ஆன்டி பயாடிக் சோதனைக்கருவிகள் ஒரு இலட்சம் உலக சுகாதார அமைப்பினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

குறித்த கருவிகள் சுகாதார அமைச்சின், மருந்து விநியோக பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

. குறித்த கருவிகள் தொகையை உத்தியோக பூர்வமாக இலங்கைக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி யொருவரின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சீன ஜனாதிபதியுடன் கோட்டா கலந்துரையாடல்





(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் இணையவழி கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, இரு தலைவர்களும் நிர்வாக விடயங்களில் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் எம்.பி. சாகர காரியவசம் உள்ளிட்டவர்களுடன் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளதாக அரச தரப்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச தொடர்புத் துறையின் தலைவர் சாங் தாவோ, Hainan மாகாணத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் லியு சிகுய் உள்ளிட்ட பல அதிகாரிகளும் சீனாவின் தரப்பில் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர். (ஜ-4)

# அமெரிக்காவில் ஆட்சி மாற்றத்தால் இலங்கைக்கும் சாதகமான நிலைமை

(கொழும்பு)

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால், ஒட்டுமொத்த உலகுக்கும் சாதகமான நிலைமை காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனாவினால் இன்று பலரது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழில்கள் முடங்கியுள்ளன.

மீனவர்கள், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், தினமும் உழைப்பவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று ஒட்டுமொத்த நாடே பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இன்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இதுதொடர்பாக எதிர்க்கட்சி என்ற வகையில், ஒட்டுமொத்த மக்களுக்காகவும் நாம் குரல் கொடுப்போம். அதேநேரம், இன்று அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பிடன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் அரசாங்கத்தைவிட, தற்போது அமையவுள்ள அரசாங்கத்தால் உலகுக்கு சாதகமான நிலைமை ஏற்படும் என்றே நாம் நம்புகிறோம் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள அலியோ ஒடை எனும் வயற் பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஜ-4)

# கொரோனாவிற்கு எதிராக போரிட ஜோ பிடனுக்கு அழைப்பு

World Health Organization

(ஜெனீவா)

கொரோனாவைரஸ்தொற்றை எதிர்த்துப் போராட அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ஜோ பிடனுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் **(WHO)** தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பிடன் மற்றும் துணை ஜனாதிபதியான கமலா ஹறிஸ் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான கூட்டுப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு, உலக சுகாதார ஸ்தாபனம் ஜோ பிடன் மற்றும் கமலா ஹறிஸ் ஆகியோருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறது எனத் தெரிவித்துள்ளார். (நி)

# பயணத்தடையை நீக்குவதாக ஜோ பிடன் உறுதி


(வோஷிங்டன்)

பல நாடுகளுக்கு எதிராக ட்ரம்ப் நிர்வாகம் விதித்துள்ள பயணக் கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குவதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பிடன் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பிடன், 13 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் மீதான டொனால்ட் ட்ரம்பின் பயணத் தடைகளை இரத்து செய்ய விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பயணத் தடைகள் விதிக்கப்பட்ட நாடுகளில் பெரும்பான்மையானவை முஸ்லிம் மற்றும் ஆபிரிக்க நாடுகள் ஆகும்.


2017 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக பதவியேற்ற சிறிது காலப் பகுதியிலேயே ட்ரம்ப்,




ஏழு பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த பயணிகள் அமெரிக்காவிற்கு செல்வதற்கு தடை உத்தரவு பிறப்பித்தார்.

கொள்கை வல்லுநர்களின் கூற்றுப்படி, நிர்வாக உத்தரவு மற்றும் ஜனாதிபதி பிரகடனத்தால் குறித்த நாடுகளுக்கான பயணத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், தடைகள் எளிதில் இரத்துச் செய்யப்படலாம். (நி)

# மியன்மார் பொதுத்தேர்தல் முடிவுகள்
## ஆங் சான் சூகியின் கட்சி தொடர்ந்து முன்னிலை



(நேபிடா)

மியன்மார் பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், ஆங் சான் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சி முன்னிலையில் உள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் மியன்மாரில் நேற்று முன்தினம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. பாராளுமன்றத்தின் இரு அவைகள், அங்குள்ள 7 மாநில சட்டப் பேரவைகள் மற்றும் 7 மண்டலங்கள் என மொத்தம் 1,171 இடங்களுக்கு தேர்தல் நடந்தது. கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளுடன் நடத்தப்பட்ட இந்த தேர்தலில் மக்கள் அதிகளவில் வாக்களித்தனர். இதுவரை இல்லாதளவுக்கு அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பதிவாகியுள்ளன.

மாலையில் வாக்குப்பதிவு முடிவடைந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட வாக்குகள் மற்றும் தபால் வாக்குகள் முதலில் எண்ணப்பட்டன. அதன்பின்னர் தேர்தல் நாளன்று பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. இதில், அரசு ஆலோசகர் .ஆங் சான் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சி அதிக இடங்களில் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருப்பதால் ஆங் சான் சூகியின் கட்சியே அதிக இடங்களை பிடிக்க வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (நி)




**வெர்ஜினியா மாநிலத்தின் ஸ்டெர்லின் பகுதியில் உள்ளதேசிய கோல்ப் மைதானத்திற்கு ட்ரம்ப் சென்றுள்ளார். பென்சில்வேனியா வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஜோ பிடன் ஜனாதிபதியாக தேர்தலில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டபோது அவர் வழக்கமாகப் பயன்படுத்தும் "மேக் அமெரிக்கா கிரேட் அகேன்" என்ற வாசகம் அடங்கிய தொப்பியை அவர் தனது தலையில் வைத்துக்கொண்டு கோல்ப் விளையாடிக் கொண்டிருந்தார்.**





**இந்தியாவில் பல மாநிலங்களில் இயற்கை விவசாய முறைகள் அந்தந்த அரசுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது அந்த வரிசையில் இணைந்திருக்கிறது காஷ்மீர். அந்த மாநில தலைநகரான ஸ்ரீநகரில், காஷ்மீர் வேளான்துறை சார்பில் முற்றிலும் இயற்கைக் காய்கறிகள் மட்டுமே விற்பனை செய்யும் "லால் மண்டி" எனும் இயற்கை விவசாய சந்தை தொடங்கப்பட்டுள்ளது. இந்த இயற்கை விவசாய சந்தையில் முழுமையான இயற்கை காய்கறி கள் மட்டுமே விற்பனை செய்யப்படும். அதேபோல, இடைத்தரகர்கள் இல்லாத நேரடி விவசாயிகள் மட்டுமே இச்சந்தையில் விற்பனை செய்யமுடியும்.**

# நூறு வருடங்களுக்கு முற்பட்ட கடிதம் கண்டுபிடிப்பு
## உலகப் போரின் போது எழுதப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்



(பாரிஸ்)

ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் அனுப்பப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும், கடிதத்தினை உள்ளடக்கிய மிகச் சிறிய கலன் ஒன்று பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பிரான்சில் நடைபயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஓர் ஜோடி குறித்த சிறிய குப்பி வடிவிலான கலனைக் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலனுக்குள் கடிதம் ஒன்று உள்ளிடப்பட்டுள்ள அதேவேளை, குறித்த கடிதம் 1910 ஆம் ஆண்டு முதல் 1916 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் எழுதப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

மேலும் இக்கடிதம் ஓர் இராணுவ வீரனால் எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இக்கடிதம் தாங்கிய கலன், புறாவினால் காவி செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

முதலாம் உலகப் போரின் போது ஜேர்மனியில் தங்கியிருந்த இராணுவ வீரன் ஒருவரால் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டுள்ள குறித்த கடிதமானது, **Dominique Jardy, curator of the Linge Museum at Orbey in eastern France** என அவரது உயர் அதிகாரிக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ஜூலை 16 என திகதியிடப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு தெளிவாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அக்கடிதமானது, 1910 அல்லது 1916 ஆம் ஆண்டு எழுதப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாம் உலகப்போர் 1914 ஆம் ஆண்டு முதல் 1918 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## வெற்றிடங்கள்

### பணி மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணி மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பணி மேற்பார்வையாளர் பதவிக்கான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் பின்வருமாறு

**01. குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் முன் அநுபவங்கள்**

**வெளியக விண்ணப்பதாரர்கள்**

ஒரே வருடத்தில் முதல் மொழி மற்றும் கணித பாடம் உட்பட நான்கு பாடங்களுக்கு திறமை சித்தியுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி

மற்றும்

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT - Civil) மற்றும் 3 வருட முன்அனுபவம்

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகுதி நிலை 5 க்கு குறையாத வேறு சமமான தகுதியும்

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் 1 அல்லது 2)**

01. மேற்கண்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சேவையில் உறுதிசெய்யப்பட்ட MA I - 2 (தொழில்நுட்பம் அற்ற) பிரிவின் ஊழியர்கள்

அத்துடன்

அரசு தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகுதி (NVQ) 5 நிலைக்கு குறையாத வேறு சமமான தகுதியும்

**02. வயதெல்லை** - 45 வயதிற்கு குறைந்த (அரசாங்கத்துறைகள் / அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகள் மற்றும் அதிகார சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கிடையாது.)

**03. சம்பள அளவு** - (MA I - 2) - ரூபா.27,910 - 300x18 - 33,310/- + அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றைய அனைத்து கொடுப்பனவுகளும்.

**04. தொழில் விதிமுறை** - நிரந்தர நியமனம்

**05. மற்றைய பிரதிலாபங்கள்** - அதிகாரசபையினால் ஊழியர்களின் சேமலாப நிதி பங்களிப்பு 12% மற்றும் ஊழியர்களால் 8% மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு 3% கூடுதல் பங்களிப்பு வழங்கப்படும். மேலும் அரசினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

தகைமைகள் முன் அனுபவம் மற்றும் குறித்த தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகைமைகள் மற்றும் முன் அனுபவங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பிரதிகளுடன் இரண்டு உறவினர் அல்லாத நடுவர்களின் தகவல்களுடன் பதிவுத்தபாலின் மூலம் **2020.11.30** ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் (நிர்வாகம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1 ஆம் மாடி, மகநெகும மஹாமெதுர, இல 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியை குறிப்பிடல் வேண்டும். அரசாங்கத்துறைகள் / அரச கூட்டுத்தாபனங்கள் / சட்டரீதியான சபைகள் மற்றும் அதிகார சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பின் அந்தந்த நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். மேலே கோரப்பட்ட தொடர்புடைய தகைமைகள், முன்அனுபவங்கள் தகவல்கள் மற்றும் ஆவணங்களை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணி மேற்பார்வையாளர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம்**

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : ....................
2. முழுப்பெயர் : ....................
3. முகவரி : ....................
4. பிறந்த திகதி : வருடம் : .......... மாதம் : .......... திகதி : .......... வயது : ..........
5. அடையாள அட்டை இலக்கம் : ....................
6. குடியுரிமை : ....................
7. பால் : ஆண் ☐ பெண் ☐
8. சமயம் : ....................
9. தொலைபேசி இலக்கம் : ....................
   மின்னஞ்சல் முகவரி : ....................
10. விளம்பரத்தின் படி தகைமை பெறும் நிலை : உள்ளக ☐ வெளிவாரி ☐
11. கல்வி தகைமைகள் :

க.பொ.த (சா.தரம்) வருடம் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த (உ.தரம்) வருடம் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

12. தொழில்முறை / தொழில்நுட்ப தகுதிகள் :

| பட்டங்கள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | காலஅளவு | தகைமையடைந்த திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

13. வேறு தகைமைகள் :
....................
14. குறித்த முன் அனுபவங்கள் :
....................
15. உறவினரல்லாத இருவரை பரிந்துரைக்கவும் :

1. பெயர் : .......... 2. பெயர் : ..........
பதவி : .......... பதவி : ..........
தொலைபேசி இல. : .......... தொலைபேசி இல. : ..........
முகவரி : .......... முகவரி : ..........

நான் வழங்கிய மேற்கண்ட விவரங்கள் உண்மை மற்றும் சரியானவை என்று நான் சான்றளிக்கிறேன்.

திகதி : .......... விண்ணப்பதாரரின் கையொப்பம் : ..........

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.

PD/CE/EE இன் பரிந்துரை ,
பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை திகதி : ..........

பணிப்பாளர் நாயகம் (C.u)
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
1 ஆம் மாடி."மகநெகும மஹாமெதுர",
இல.216 டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி : headoffice198621@gmail.com

# தமிழ்த் தேசத்தின் பாதுகாப்பில் அக்கறையாகவுள்ளது இந்தியா

## மாவை சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**
**தமிழினத்தின் விடுதலையிலும் தமிழ்த் தேசத்தின் பாதுகாப்பிலும் இந்தியாவின் தலையீடு அவசியம் என்ற அடிப்படையில் அவர்கள் அக்கறையைச் செலுத்தியுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் இந்திய மத்திய அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட விரும்புவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரசியல், இராஜதந்திர நகர்வுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

சீனாவின் தலையீடுகள், அதற்கு எதிரான நாடுகளின் தலையீடுகள், இந்தியாவின் உரித்து நாட்டின் பாதுகாப்பில் தங்கியுள்ளது என்பதில் அந்த நாடுகள் அக்கறையாகவுள்ளன.

நாட்டின் பாதுகாப்பு, குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களின் பாதுகாப்பு, இந்தியாவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமானதாக இருக்கும், இருக்கின்றது என்றெல்லாம் அவர்கள் கருதுவதால், கூடிய அக்கறை செலுத்துகின்றனர்.

ஆனபடியால், தமிழினத்தின் விடுதலைக்கு, தமிழ்த் தேசத்தின் பாதுகாப்புக்கு இந்தியாவின் தலையீடு அவசியம் என்ற அடிப்படையில் அவர்கள் அக்கறையைச் செலுத்தியுள்ளதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம்.

ஏற்கனவே அவ்வாறு பல விடயங்களைப் பேசக் கூடியதாக இருந்திருக்கின்றது. அப்படி மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்



பட்சத்தில் இந்திய மத்திய அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட விரும்புகின்றோம்.

அது இந்திய அரசின் ஒரு தேவைப்பாடாகவும், எங்களுக்கு அதிக தேவைப்பாடாகவும், ஒரு நிகழ்ச்சி நிரலாகவும் இருக்கின்றது. எனவே, அவ்வாறான பேச்சு இடம்பெற வேண்டும் என நாங்களும் விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## ஐதராபாத்தை வீழ்த்தியது டெல்லி

# மும்பை-டெல்லி இறுதிப்போட்டி இன்று




அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் ஐதராபாத் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது டெல்லி கப்பிடல்ஸ் அணி.

ஐ.பி.எல். தொடரின் குவாலிபையர்-2 அபுதாபியில் நடைபெற்றது. இதில் டெல்லி கப்பிட்டல்ஸ் - சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின.

டொஸ் வென்ற டெல்லி பட்டிங்கை தேர்வு செய்தது. மார்கஸ்ஸ்டொய்னிஸ், ஷிகர் தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் டெல்லி கப்பிட்டல்ஸ் ஸ்கோர் ஜெட் வேகத்தில் உயர்ந்தது.

ஸ்டொய்னிஸ் 38 ரன்னில் ஆட்டமிழந்தார். ஷ்ரேயாஸ் அய்யர் 21 ரன்னில் வெளியேறினார். தவான் அதிரடியாக ஆடி அரைச்சதம் அடித்து 78 ரன்னில் வெளியேறினார். அடுத்து வந்த ஹெட்மயர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இறுதியில், டெல்லி கப்பிட்டல்ஸ் 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 189 ரன்கள் எடுத்தது. ஹெட்மயர் 22 பந்தில் 4 பவுண்டரி, 1 சிக்சருடன் 42 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 190 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் வோர்னர் 2 ரன்னிலும், பிரியம் கர்க் 17 ரன்னிலும் வெளியேறினர்.

மணிஷ் பாண்டே 21 ரன்னில் வெளியேறினார். ஹோல்டர் 11 ரன்னில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் கேன் வில்லியம்சன் பொறுப்புடன் ஆடினார். அவர் 45 பந்தில் 4 சிக்சர், 5 பவுண்டரியுடன் 67 ரன்கள் எடுத்து வெளியேறினார்.

அப்துல் சமதுடன் ரஷீத் கான் ஜோடி சேர்ந்தார். சமது 15 பந்தில் 33 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

19வது ஓவரை வீசிய ரபாடா 3 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

இறுதியில், ஐதராபாத் அணி 8 விக்கெட்டுக்கு 172 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் டெல்லி அணி 17 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் டெல்லி அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

டெல்லி அணி சார்பில் ரபாடா 4 விக்கெட்டுக்கள், ஸ்டொய்னிஸ் 3 விக்கெட்டுக்களும் வீழ்த்தினர். மும்பை மற்றும் டெல்லி அணிகள் மோதும் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது. (4)

# நெருக்கடிகளை சாதகமாக பயன்படுத்தும் அரசாங்கம்

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் ஏற்படும் நெருக்கடிகளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, அதனை விற்பனை செய்து வாழ முயற்சிக்கும் ராஜபக்ஷாக்கள் அந்த நெருக்கடிகள் காரணமாகவே தோல்வியை தழுவ வேண்டிய நிலைமையும் ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம், மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளிட்ட தனக்கு சாதகமான விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வைரஸ்பரவல்தொடர்பில் அக்கறை கொள்ளாது செயற்பட்டதன் காரணமாக இன்று வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில், அது தொடர்பில் மக்கள் மீது பழிசுமத்த முயற்சித்து வருகின்றார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

நாட்டில் ஏற்படும் நெருக்கடிகளை விற்பனை செய்து வாழ்வது ராஜபக்ஷக்களுக்கு பழக்கப்பட்ட விடயமாகும். ஆரம்பத்திலும் அவர்கள் அவ்வாறு செயற்பட்டுள்ளமைக்கு பல சான்றுகள் உள்ளன.

சுனாமி நிதியத்தை கொள்ளையிட்டவர்களே இன்று ஆளும் தரப்பில் இருக்கின்றனர். இவர்கள் தற்போது கொரோனா வைரஸ் பரவலையும் விற்பனை செய்து நாட்டை சூறையாடி வருகின்றனர். தீவு நாடான இலங்கைக்கு வைரஸ் பரவல் ஏற்படுவதற்கு காரணம் ஆளும் தரப்பினரின் முறையற்ற செயற்பாடுகளே.

ஆரம்பத்தில் சீனப் பெண்ணை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து காப்பாற்றியதாகவும், வைரஸ் தொற்றிலிருந்து இலங்கை பாதுகாப்பு பெற்றுள்ளது என்று உலக நாடுகளுக்கு தெரிவிப்பதற்காகவும் காணொளியொன்றை தயாரித்து வெளிநாடுகளுக்கு தெரியப்படுத்தி, சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு விடுத்தனர்.

பின்னர் சீன உயர் அதிகாரிகள், அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ ஆகியோர் வந்தனர். இதேவேளை பிரன்டிக்ஸ் நிறுவனத்திற்கும் இந்தியாவிலிருந்து ஊழியர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்களுக்கு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் எதுவும் தலையீடு செலுத்தவில்லை. இந்நிலையில், அரசாங்கம் வைரஸ் பரவலுக்கு மத்தியில் வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ளும்.

வைரஸ் தொற்றை கண்டறிவதற்கான பி.சி.ஆர்.இயந்திரமொன்றை நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்திடம் 80 இலட்சம் ரூபா பணம் இல்லை.

ஆனால் மக்கள் மீது அக்கறை கொண்ட தலைவர் 5 கோடி ரூபாய் பெறுமதியான காரிலே பயணிக்கின்றார்.

இவ்வாறு இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்தவர்களும் அதனை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இவ்வாறுதான் தேசப்பற்றுள்ள தலைவர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

# அமெரிக்காவின் ஜனாதிபதிக்கும் துணை ஜனாதிபதிக்கும் மங்கள வாழ்த்து



(கொழும்பு)

அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் தெரிவு செய்யப்பட்டதைப் போன்று இனம், மதம் ஆகியவற்றைப் புறந்தள்ளி திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் எம் நாடு எப்போது ஒரு தலைவரைத் தெரிவு செய்யப்போகின்றது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜோ பிடனும் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸூம் தெரிவாகியிருக்கின்றனர். அமெரிக்காவின் முதலாவது பெண் துணை ஜனாதிபதி என்ற பெருமையை கமலா ஹரிஸ் தனதாக்கியிருக்கும் நிலையில், உலகம் முழுவதிலும் இருந்து அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் தனது வாழ்த்துக்களை வெளிப்படுத்தும் விதத்தில் மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"நம்மைச்சார்ந்த பெண்ணொருவர் உலகிலேயே மிகவும் பலம்பொருந்திய பெண்ணாக மாறியுள்ளமை தெற்காசியாவைச் சேர்ந்த அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க விடயமாகும். இதனைப் போன்று இனம், மதம், சாதி போன்றவற்றை விடுத்து திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவு செய்யப்போகின்றது?" என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஜ-4)

# பிரதான நகரங்களை மூடுவதற்கு ஆலோசனை

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தின் பிரதான நகரங்களை நாளை முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நகருக்கு வருவோரின் தொகை அதிகரிக்கும் என்றும் இது தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு பாதகமாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு இவ்விடயம் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ஜ-4)

# கிழக்கு மாகாணத்தில் 107 பேருக்கு கொரோனா

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 107 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் நேற்றுக்காலை ஆறு பேர் புதிய தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்த அறிவிப்பை விடுத்தார்.

மக்கள் அவதானமாக செயற்பட்டு வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களை மக்கள் அடையாளம் கண்டு தெரிவிக்குமாறும் சன நடமாட்டத்தை குறைத்து இயலுமான வரை வீட்டில் இருக்குமாறும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஜ-4)

# நகை அடகு கடன் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தங்க நகை அடகு கடன் தொகை அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப் பகுதியில் சுமார் 643 பில்லியன் ரூபா தங்க நகை அடகுக் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து பொதுமக்கள் இவ்வாறு தங்க நகை அடகுக் கடன் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சில நிறுவனங்கள் ஒரு பவுணுக்கு 57 ஆயிரம் ரூபா முதல் 60 ஆயிரம் ரூபா வரையில் அடகு வழங்கப்படுகின்றன.

சில தனியார் நிறுவனங்கள் ஒரு பவுணுக்கு அடகுக் கடன் தொகையாக 65 ஆயிரம் ரூபா வரையில் வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

# யாசகருக்கு கொரோனா

(அநுராதபுரம்)

அநுராதபுரம் நகரை சேர்ந்த யாசகர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதியில் உள்ள மேலும் 81 யாசகர்களை தனிமைப்படுத்த நேற்று முன்தினம் பிற்பகல் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அநுராதபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உறுதியான குறித்த யாசகர் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பி.சி.ஆர்.பரிசோதனைக்கு மாற்றாக ஆன்டிஜென் சோதனையை பயன்படுத்த முடியாது

## அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸிற்கான பி.சி.ஆர். பரிசோதனைக்கு மாற்றாக எப்போதும் ரெட்பிட் ஆன்டிஜென் எனப்படும் எதிரியாக்கியை கண்டறிதல் சோதனையை பயன்படுத்த முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் தலைவர் ஹரித் அளுத்கே இதனைத் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆன்ஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளைப் பயன்படுத்துவதில் சிலர் குழப்பமடைந்துள்ளனர்.

இரண்டு சோதனைகளுமே நோயாளியின் உடலில் கொரோனா வைரஸ் ஆன்டிஜெனின் இருப்பை அல்லது இல்லாமையை கண்டறிகின்றன.

பி.சி.ஆர். மற்றும் ஆன்டிஜெனை பயன்படுத்தும் போது நன்மைகள் மற்றும் தீமைகள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.



ஆன்டிஜன் சோதனை செய்யப்பட்டு அது கொரோனா வைரஸ் தொற்று இல்லையென்று காட்டினாலும் குறித்த ஒருவருக்கு பி.சி.ஆர் சோதனை செய்யப்பட வேண்டும் என்பது அவசியம் என தெரிவித்துள்ளார். (ஜ-4)

# வீட்டிலிருந்து வெளியேறும் போது முகக்கவசம்,சமூக இடைவெளி கட்டாயம்

(கொழும்பு)

**முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளில் மட்டுமல்லாமல் நாடு முழுதும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.**

அத்துடன் அதனை மீறுவோரைக் கைது செய்ய நாடளாவிய ரீதியில் நேற்று முதல் சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் இந் நடவடிக்கைகள் மிகக் கண்டிப்பாக பின்பற்றப்படும் எனவும், நாட்டில் எந்தப் பிரதேசத்தில் இருந்தாலும், ஒருவர் வீட்டை விட்டு வெளியேறும் போது, முகக் கவசம் மற்றும் சமூக இடைவெளி தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்படுமாறு அவர் எச்சரித்தார்.

கடந்த 8 நாட்களில் மட்டும் முகக் கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் 125 பேரைக் கைது செய்துள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன, இனி மிகக் கண்டிப்புடன் நாடளாவிய ரீதியில் குறித்த கைது நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக கூறினார். (நி-4)

# கொழும்பு மத்திய தபால் சேவை மீண்டும் ஆரம்பம்-தபால் திணைக்களம்

(கொழும்பு)

கொழும்பு மத்திய தபால் பரிமாறல் கடமைகள் சில மீண்டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு,

குறைந்த பட்ச பணியாளர்களை பயன்படுத்தி மத்திய தபால் பரிமாறல் கடமைகளை தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இந்த ஆளணியினரை எழுந்தமானமாக பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்திய மூன்று சந்தர்ப்பங்களில் மூவர் தொற்றுக்குள்ளானதாக பதிவானதையடுத்து இந்த அலுவல்களை முழுமையாக இடை நிறுத்துவதற்கு கடந்த 05 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

நேற்று ஊரடங்கு சட்டத்தில் தளர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து கிருமி நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட மத்திய தபால் பரிமாறல் வரையறுக்கப்பட்ட கடமைகள் சிலவற்றுக்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக

சர்வதேச விரை தூதர் தபால் சேவை **(EMS Courier)**

வர்த்தக தபால் **(Business mail)**

உள்ளூர் விரை தூதர் தபால் சேவை **( SL Post Courier )**

செயற்பாட்டு அலுவல்களுக்காக திறக்கப்படும் பதிவுத் தபால் **(Register Letters)** பிரிவு தெரிவு நடவடிக்கைகளுக்காக இன்று திறப்பதற்கு எதிர் பார்க்கப்படுவதுடன் கொழும்பு மாநகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் அரசாங்க அலுவலகங்களுக்கு பதிவு செய்யப்பட்ட தபால்களை விநியோகிக்கும் அலுவல்களை நாளை புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அல்லது தனியார் நிறுவனங்களுக்கான முத்திரை இடல் இயந்திரம் தொடர்பான அலுவல்களை 011 232 0700 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரத்தை தெரிவுசெய்து கொள்வதற்கான முன்னேற்பாட்டை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் வரையறுக்கப்பட்ட ஊழியர்களைப் பயன்படுத்தி கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதனால் கடமைகள் ஓரளவிற்கு தாமதமடையக் கூடும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# நாட்டில் இன்னும் சமூக தொற்று ஏற்படவில்லை சுகாதார அமைச்சு மீண்டும் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறவில்லை என சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஏற்கனவே உள்ள ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் எவ்வாறான கருத்துக்களை தெரிவித்து வந்தாலும் சமூகப் பரவல் நாட்டில் உள்ளது என்பதை எதிர்க் கட்சிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், இந்த நேரத்தில் கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர கூறினார்.

ஆரம்பத்தில் மினுவாங்கொட கொத்தணியில் இருந்து ஏராளமான நோயாளிகள் கண்டறியப்பட்டனர். ஆனால் இப்போது எண்ணிக்கையில் குறைவு காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முடக்க கட்டுப்பாடுகள் இல்லாதபோது பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய பெரும்பாலானோர் கண்டறியப்பட்டதால், அது ஏற்கனவே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவியிருப்பது கண்டறியப்பட்டது என்றும் இதன் விளைவாக நாடு முழுவதும் ஏராளமான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் சமூக பரவல் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள சுதத் சமரவீர, இருப்பினும், சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறினால், சமூகத் தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எடுப்பதும் கொடுப்பதும்

லோகமான்ய பாலகங்காதர திலகர் இருந்தார். அவருக்கு 15 வயதிலேயே கல்யாணம் நடந்தது. மனைவி பெயர் தபிபாய். மிகவும் பெரிய குடும்பத்துப் பெண். நல்ல குணம். அந்தக் காலத்திலே திருடர்கள் பயம் அதிகம். இந்தக் காலத்திலே மட்டும் என்ன...என்று கேட்கிறீர்களா? நீங்கள் கேட்கிறது நியாயம் தான். இருந்தாலும் இந்தக் காலத்துத் திருடனுக்கும் அந்தக் காலத்துத் திருடனுக்கு ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு.

அந்தக் காலத்துத் திருடன் நியாயம்..அநியாயம் பார்ப்பது இல்லை..எதுவாக இருந்தாலும் அடித்துக் கொண்டு போய் விடுகின்றான்.

இந்தக் காலத்துத் திருடன் அப்படி இல்லையாம். அவனிடம் ஒரு தார்மீக உணர்வு உண்டாம்.

அப்பொழுது உள்ள கொள்ளைக்காரர்கள் எதைக் களவாடினாலும் சரி. அரிசியை மட்டும் களவாடுகிறது இல்லையாம். அப்படி ஒரு கொள்கை. அதனாலேயே பாருங்க.. அந்தக் காலத்துப் பெண்கள் நகை நட்டுகளை பத்திரமாக வைக்க வேண்டும் என்றால் பெட்டியிலே வைப்பது இல்லை அரிசி பானையில் போட்டு வைத்துவிடுகின்றார்கள். இப்பொழுதெல்லாம் வங்கிகளில் சேப்டி லொக்கர் இருக்கின்றது. அங்கே வைத்து பூட்டி வைத்துவிடுகின்றார்கள். அந்த காலத்து சேப்டி லொக்கர் அரிசி பானை. வளையம்-மூக்குத்தி -தோடு இப்படி எதுவாக இருந்தாலும் அதிலே போட்டு பத்திரமாக வைத்துக் கொள்வார்கள். திருடன் தான் அரிசி பானை பக்கம் போவதில்லையே. திலகருடைய மனைவி தபிபாயும் அதே மாதிரி தன்னுடைய ஆபரணங்களை ஒரு அரிசிப்பானைக்குள்ளே போட்டு மூடி வைத்திருந்தார்கள். இப்படி இருந்த பொழுது...ஒரு நாள் ஒரு பிச்சைக்காரப் பெண் வீடு வீடாக பிச்சை கேட்டுக் கொண்டு வந்தார்.

திலகர் வீட்டுக்கும் வந்து தர்மம் போடுங்கள் தாயே.. என்றார். அந்த அம்மா தபிபாய் காதிலே இது விழுந்தது. உடனே கை நிறைய அரிசியை அள்ளிக் கொண்டு வந்து போட்டார்கள். பாத்திரத்திலே அரிசியை போட்டதன் பின்பு தான் அது பளிச் என்று கண்ணிலே பட்டது. அதாவது அந்த அம்மாவின் வைரமூக்குத்தி ஒன்று அரிசியோடு சேர்ந்து அந்தப் பிச்சைக்காரப் பெண் பாத்திரத்திற்கு போய்விட்டது. இந்த அம்மாவுக்கு மனசுக்குள்ளே குழப்பம்.

மூக்குத்தி போய்விட்டதே..பிச்சைப் பாத்திரத்திலேயிருந்து அதை எப்படி எடுப்பது? வாய் திறந்து அதை கேட்கிறதற்கும் கூச்சம். திண்ணையிலே உட்கார்ந்திருந்த திலகர் இவ்வளவையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார். மனைவியின் மனதிற்குள்ளே நடக்கின்ற மௌனப் போராட்டத்தை அவர் நன்றாகப் புரிந்து கொண்டார். மனைவியைப் பார்த்து சொன்னார். தபிபாய்..இது தெய்வ சம்மதம். அவளுக்குச் சேர வேண்டிய மூக்குத்தி அவளிடம் போய்விட்டது. பிச்சைப் பாத்திரத்திலே விழுந்த மூக்குத்தியை எடுக்க வேண்டாம். என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் அந்த அம்மா வீட்டுக்குள்ளே போய்விட்டார் களாம். இந்தக் காலத்திலேயெல்லாம் அது மாதிரி நடக்குமா? வெறும் அரிசியை போட்டுவிட்டு விவகாரம் செய்து கொண்டிருக்க மாட்டோமே? ஒரு பெரிய மனிதன் வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்தான். ஐயா நாங்கள் பிச்சைக்காரர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கின்றோம். அதற்கு நிதி சேர்க்கின்றோம். அதற்கு ஒரு நூறு ரூபா கொடுத்தீர்கள் என்றால்..எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.. என்றான்.

அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது போ என்றார் அவர்.

அப்படி என்றால் ஒரு 50 ரூபாயாவது கொடுங்களேன் என்றான் இவன். அதுவும் முடியாது என்று சொல்லிவிட்டார் அவர். 25 ரூபா என்று இழுத்தான் இவன். எதுவும் முடியாது..என்றுவிட்டார் அவர்.

சரி இவ்வளவு பெரிய வீட்டுக்கு வந்துவிட்டு வெறுங்கையோடு திரும்புவது நன்றாக இருக்காது. அதனால் சும்மா ஒரு ரூபா மட்டுமாவது கொடுங்கள் என்றான் அவன். ஒரு பைசா கூட என்னிடம் கிடையாது என்றார் அவர். அப்படி என்றால் நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள் என்றான்.. அவன்.

என்ன செய்ய வேண்டும் என்றார். எங்கள் சங்கத்திலே நீங்களும் ஒரு மெம்பரா சேர்ந்து கொள்ளுங்கள் என்றான்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்


**14**


**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




**1777 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கொடி வடிவமைக்கப்பட்டது. அது 27 முறை திருத்தியமைக்கப்பட்டது. இப்போதைய கொடியில் உள்ள 50 நட்சத்திரங்கள் அமெரிக்காவின் ஐம்பது மாகாணங்களை குறிக்கின்றது. பிரிட்டிஷ் அரசிடம் இருந்து சுதந்திரம் பெற்ற 13 பிரிட்டிஷ் காலனிகளை 13 வெள்ளை சிவப்பு கோடுகள் குறிக்கிறது.**

## அமெரிக்க கொடி



**50 நட்சத்திரங்கள் 13 வெள்ளை சிவப்பு கோடுகள் கொண்ட கொடி**

### அமெரிக்காவில் அதிகாரபூர்வ மொழி இல்லை

நடைமுறையில், அமெரிக்காவின் தேசிய மொழி ஆங்கிலம் ஆகும். இருப்பினும், கூட்டாட்சி மட்டத்தில் அதிகாரபூர்வ மொழியாக இல்லை, இருப்பினும் அமெரிக்கக் குடியுரிமை தேவைகள் போன்ற சில சட்டங்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. அமெரிக்கா முழுவதும் பேசுகையில், ஸ்பானிஷ் மிகவும் பரவலாகப் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டாம் மொழியாகும்.

**அமெரிக்காவில் அதிகாரபூர்வ மொழி இல்லை. நடைமுறையில், அமெரிக்காவின் தேசிய மொழி ஆங்கிலம் ஆகும். ஸ்பானிஷ் மிகவும் பரவலாகப் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டாம் மொழியாகும்.**

### மாநில அரசாங்கங்கள்

மாநில அரசாங்கங்கள் ஏறக்குறைய ஒரே மாதிரியான வடிவமைப்பைக் கொண்டுள்ளன. நெப்ராஸ்கா மட்டும் பிரத்தியேகமாக ஒற்றை அவை நாடாளுமன்றத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநரும் (தலைமை நிர்வாகி) நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

### ஐக்கிய அமெரிக்க நாட்டின் மாநிலங்கள் பற்றி....

ஐக்கிய அமெரிக்க நாட்டின் மாநிலம் என்பது தனது இறைமையை ஐக்கிய அமெரிக்காவின் கூட்டரசு உடன் பகிர்ந்து கொண்டுள்ள 50 அங்க அரசியல் அமைப்புகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் கூட்டரசிற்கும் இறையாண்மை பகிர்ந்து கொள்ளப்படுவதால் அமெரிக்கர்கள் கூட்டுக் குடியரசிற்கும் தாங்கள் வாழும் மாநிலத்திற்கும் குடியுரிமை பெற்றவர்களாவர். மாநில குடியுரிமையும் வாழ்விடமும் நெகிழ்வானவை. மாநிலங்களுக்கிடையே குடிபெயர எந்த அரசு அனுமதியும் தேவையில்லை. சில நீதிமன்றத் தடை பெற்றவர்கள் மட்டுமே குடிபெயர அனுமதி தேவை.

மக்கள் தொகையின்படி மிகச் சிறிய மாநிலமாக 600,000 மக்கள்தொகை கொண்ட வயோமிங்கும் மிகப்பெரிய மாநிலமாக 38 மில்லியன் மக்கள் தொகை கொண்ட கலிபோர்னியாவும் உள்ளன. பரப்பளவில் மிகச்சிறியதாக 1,214 சதுர மைல்கள் **(3,140 km²)** பரப்புள்ள றோட் தீவும் மிகப் பெரியதாக 663, 268 சதுர மைல்கள் **(1,717,860 km²)** பரப்புள்ள அலாஸ்காவும் உள்ளன. நான்கு மாநிலங்கள் மாநிலம் என்பதைவிட பொதுநலவாயம் என தங்கள் அலுவல் முறையான பெயர்களில் குறிப்பிடுகின்றன.

மாநிலங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு உள்ளாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பினும் இறையாண்மை இல்லை. மாவட்டக் கட்டமைப்பு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. மாநில அரசுகளுக்கு மக்கள் அதிகாரம் வழங்குகின்றனர் தங்களுக்கான அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டுள்ளன. இவை அனைத்துமே மக்களாட்சித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு மாநில அரசிற்கும் மூன்று பிரிவுகள் உள்ளன: ஆளுநர் (நிர்வாகம்), மாநில சட்டப்பேரவை (சட்டவாக்கம்), மாநில நீதிமன்றம் (நீதி பரிபாலனம்), ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் கீழ் மாநிலங்களுக்கு பல அதிகாரங்களும் உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களை ஏற்கும் அதிகாரமும் இவற்றில் ஒன்றாகும். பொதுவாக, உள்ளக சட்ட ஒழுங்கு, பொதுக்கல்வி, பொதுச் சுகாதாரம், உட்கட்டமைப்பு, உள்ளக போக்குவரத்து மற்றும் மாநிலங்களிடையேயான வணிக்க் கட்டுப்பாடு ஆகியவை மாநிலங்களின் பணிகளாகவும் பொறுப்புகளாகவும் கருதப்படுகின்றன. இருப்பினும் தற்காலத்தில் இவற்றில் கூட்டரசு கணிசமான அளவில் முதலீட்டை செய்துவருவதுடன் கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றது.

காலவெள்ளத்தில், அமெரிக்க அரசியலமைப்பு திருத்தப்பட்டு வந்துள்ளது. அதன் பயன்பாடும் புரிதலும் மாறியுள்ளது. பொதுவாக மையப்படுத்தலை நோக்கிய பயணமாக இது உள்ளது. மாநிலங்களின் உரிமைகள் குறித்து தொடர்ந்து உரையாடப்பட்டு வருகின்றது.

மாநிலங்களும் அவர்களின் குடிகளும் கூட்டரசின் பேராயத்தில் அங்கம் பெறுகின்றன. செனட் மற்றும் கீழவை என்ற ஈரவைகளைக் கொண்ட சட்டமன்றத்தில் (காங்கிரஸில்) ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரண்டு செனட்டர்களும் குறைந்தது ஒரு கீழவை உறுப்பினரும் ஒதுக்கப்பட்டுள்ளனர். கீழவையில் கூடுதல் உறுப்பினர்கள் அந்த மாநிலத்தின் மக்கள்தொகையை பொறுத்து வழங்கப்படுகின்றது. இதற்காக பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு அரசியலமைப்பின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடந்த கணக்கெடுப்பில் மாநிலத்தின் விகிதாசாரத்தின்படி உறுப்பினரிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

தவிரவும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அமெரிக்கக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர் பிரதிநிதிகள் **(electors)** குழுவிற்கு தங்கள் மாநிலத்தின் செனட்டர்கள், கீழவை உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு இணையான தேர்வாளர் பிரதிநிதிகளை **(electors)** தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது. இதுபற்றி முன்னர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒன்றியத்திற்கு புதிய மாநிலங்களைச் சேர்க்கும் அதிகாரத்தை அரசியலமைப்பு பேராயத்திற்கு வழங்கியுள்ளது. 1776இல் நிறுவப்பட்ட பிறகு தொடக்கத்தில் பதின்மூன்றாக இருந்த மாநிலங்கள் தற்போது 50ஆக உயர்ந்துள்ளது. கடைசியாக 1959இல் அலாஸ்காவும் அவாயும் மாநிலங்களாக ஏற்கப்பட்டன.

**ஆரம்பத்தில் பதின்மூன்றாக இருந்த மாநிலங்கள் தற்போது 50ஆக உயர்ந்துள்ளது. கடைசியாக 1959இல் அலாஸ்காவும் அவாயும் மாநிலங்களாக ஏற்கப்பட்டன.**


மாநிலங்கள் ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்வதற்கான அதிகாரம் உடையவையா என்பது குறித்து அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை. உள்நாட்டுப் போரை அடுத்து சில ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்றம், டெக்சாசு எ. வைட் வழக்கில், ஒரு மாநிலம் தன்னிச்சையாக அவ்வாறு செய்ய இயலாது எனத் தீர்ப்பு வழங்கியது.

**ஐக்கிய அமெரிக்க நாட்டின் மாநிலம் என்பது தனது இறைமையை ஐக்கிய அமெரிக்காவின் கூட்டரசு உடன் பகிர்ந்து கொண்டுள்ள 50 அங்க அரசியல் அமைப்புகளில் ஒன்றாகும். மக்கள் தொகையின்படி மிகச் சிறிய மாநிலமாக வயோமிங்கும் மிகப்பெரிய மாநிலமாக கலிபோர்னியாவும் உள்ளன. மாநிலங்கள் மரவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**

ஆரம்பத்தில் பதின்மூன்று மாநிலங்கள் பிரித்தானிய ஆட்சியை எதிர்த்து போராடியதால் பதின்மூன்று நாடுகளாக உதித்தன.

(தொடரும்...)

# மெனிங் சந்தையில் குழப்பம்



(கொழும்பு)

புறக்கோட்டை மெனிங் சந்தையில் நேற்றுக் காலை குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

மெனிங் சந்தையில் மரக்கறி விற்பனை செய்வதற்காக வந்த போது சந்தை மூடப்பட்டிருந்தது.

இதனால் வர்த்தகர்கள் சிக்கலான நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

சந்தை மூடப்பட்டிருந்த நிலையில் வர்த்தகர்கள் சிலர் அவ்விடத்திற்கு சென்றுள்ளனர். எப்படியிருப்பினும் பொலிஸார், வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகளுக்கு உள்ளே நுழைவதற்கு அனுமதி வழங்காததால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. (ஜ-4)

## பொலிஸ் சார்ஜன்ட் கைது


(கொழும்பு)

தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்காக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவின் கீழுள்ள பகுதியிலிருந்து தனிநபர்களை கொண்டு செல்வதற்காக தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்காகவே இவர் பண்டாரகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன்இதன்போது மேலும் மூன்று சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயணித்த வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்—எதற்கு – எப்படி



## பலி பீடம்

ஆலயத்துக்குள் இப்போது நாம் பலிபீடம் இருக்கும் பகுதிக்கு வந்துவிட்டோம்.

எல்லா ஆலயங்களிலும் கொடி மரத்துக்கு அடுத்தபடியாக பலிபீடம் அமைத்து இருப்பார்கள். கொடி மரத்தை வழிபட்டு முடித்ததும் நாம் பலி பீடத்தை மனதார வழிபட வேண்டும்.

பொதுவாக பலி பீடங்கள் மூன்று அடுக்கு பீடம் மீது தாமரை மலர் வடிவம் போன்று அமைக்கப்பட்டிருக்கும். அந்த பீடங்களில் சிற்பங்கள் இருக்கும். சில ஆலயங்களில் வெறும் பீடம் மட்டும் இருக்கும்.

திருப்பதி போன்ற ஆலயங்களில் பலி பீடத்துக்கும் தங்க கவசம் போர்த்தி இருக்கிறார்கள். இதன்மூலம் கருவறைக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் பலி பீடத்துக்கும் கொடுக்கப்படுவதை அறியலாம்.

சரி...பலி பீடம் என்றால் என்ன? அதன் பின்னணியில் என்ன சிறப்பு அடங்கியுள்ளது என்பதை நாம் தெரிந்து. கொள்ள வேண்டும்.

பலி பீடம் என்றதும் 90 சதவீதம் பேர் மனதில் கோழி, ஆடு போன்றவைகளை பலி கொடுக்கும் இடமா என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம். ஏனெனில் வேத காலத்தில் நம் முன்னோர்கள் வேள்வித் தூணாகவும் விலங்குகளை பலியிடும் மேடையாகவும் இருந்தவை தான் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக உரு மாறி இன்று கொடி மரமாகவும் பலி பீடமாகவும் வடிவெடுத்துள்ளன என்று சொல்கிறார்கள்.

எனவே தான் பலி கொடுக்கும் இடம் பலி பீடம் என்ற எண்ணம் பலரது மனதிலும் பதிந்துள்ளது. இதை உறுதிப்படுத்துவது போல கிராமங்களில் இன்றும் கோவில் ஆண்டு திருவிழாக்களின் போது பலி பீட மேடையில் ஆடு, கோழிகளை பலி கொடுத்து விடுவதைப் பார்க்கலாம்.

இது தவறு. பலி பீடம் என்பது உயிர்களைப் பலியிட அமைக்கப்பட்டது அல்ல. இதைப் பலரும் சொன்னாலும் கிராம மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இரத்தம் கண்டால் தான் அம்மன் கோபம் அடங்கும் என்று சொல்லி எல்லோரது வாயையும் அடைத்து விடுவார்கள். கிராமத்து மக்களின் இந்த நம்பிக்கை வம்சம் வம்சமாக தொடர வாய்ப்புள்ளது.

ஆனால் ஆகம விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள சிவாலயங்களிலும் வைணவத் தலங்களிலும் உள்ள பலி பீடங்கள் நம் வாழ்வை மேம்படுத்தும் ஒன்றாகக் கருதப்பட்டு போற்றப்படுகின்றன. அந்த ஆலயங்களில் பலி பீடங்களில் உயிர்கள் பலி கொடுக்கப்படுவது இல்லை.

அதற்கு பதில் நம்மிடம் உள்ள மோசமான குணங்களை அங்கு பலியிடுகிறார்கள். அதெப்படி குணத்தை பலியிடுவது என்று நினைக்கிறீர்களா?

மனிதர்களாகிய நமக்கு ஆழ்மனதில் கெட்ட குணங்கள் இருக்கும். எவ்வளவு தான் பக்குவப்பட்ட பெரிய மனிதர்களாக இருந்தாலும் அவர்கள் மனதுக்குள்ளும் போட்டி, பொறாமை, காமம், குரோதம், கோபம், தாபம், சூது, வாது, வஞ்சனை, வயிற்றெரிச்சல் போன்றவைகளில் ஏதாவது ஒன்றிரண்டு கெட்ட குணங்கள் நீக்க முடியாததாக இருக்கலாம்.

இப்படி கெட்ட குணத்துடன் கருவறை பகுதிக்கு நாம் சென்றால் கடவுள் நமக்கு எப்படி அருள்புரிவார். நம் மனது எந்த ஆசாபாசமும் இல்லாமல் தெள்ளத்தெளிவாக ஒன்றுமே இல்லாமல் சுத்தமாக வெற்றிடமாக இருந்தால் தான் நம் பக்கம் இறைவன் வருவார்.

எதுவும் இல்லாத, எந்த எதிர்பார்ப்பும் இல்லாத மனநிலை உடையவர்களால் தான் கடவுள் பக்கம் செல்ல முடியும். எனவே நம் மனதில் உள்ள தீய குணங்களை எல்லாம் வெளியேற்ற வேண்டும். 'அதாவது கெட்ட நினைவுகளை பலி கொடுக்க வேண்டும்.

இது ஆலய வழிபாட்டில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் நாம் நம் மனதில் உள்ள தீய அழுக்குகளை விரட்டும்போது நாம் நல்ல மனிதனாக மாறி விடுவோம். இத்தகைய அற்புத மாற்றத்தை ஒவ்வொரு பக்தனிடமும் ஏற்படுத்தும் அருமையான இடம்தான் பலிபீடம்.

உயிர்ப்பலி இல்லாத இந்த ஆன்மீகப் பலிபீ டமானது உயரியமானது. இந்த பலி பீடத்தை அமைப்பதற்கு என்று விதிகள் உள்ளன. பலி பீடத்தின் உயரம் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள மூலவரின் பீடத்து உயரத்துக்கு சமமாக இருக்க வேண்டும். பலி பீடத்தில் பாதுகா, ஜகதி, குமுதம், குமுத பத்திகம், கலா கம்பம், நிதிரவம், சுபோதம், அசுரபத்தி, பத்மம் என்று பல வகைகள் உள்ளன. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## நிவாரணத்திற்காக நின்ற பெண் மயங்கி விழுந்து மரணம்

(கொழும்பு)

கொரோனா நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாவினைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த பெண் ஒருவர் கீழே மயங்கி விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் நீர்கொழும்பு கட்டான கதிரான கிராம உத்தியோகத்தர் காரியாலயத்திற்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

வடக்கு கதிரான பகுதியைச் சேர்ந்த உடுகம கோரலாகே சோமாவதி என்ற 60 வயதான பெண்ணே இச்சம்பவத்தில் உயிரிழந்தார். (ஜ-4)

## 2923 பேர் கைது

(கொழும்பு)



தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, நேற்றுக் காலை நீக்கப்படும் வரையான காலப் பகுதியில் ஊரடங்கை மீறிய 2 ஆயிரத்து 923 பேர் மேல் மாகாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன், குறித்த காலப் பகுதிக்குள் 438 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.


கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த மாதம் 29 ஆம் திகதியிலிருந்து மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவானது, நேற்றுக் காலை 5 மணியுடன் சில பொலிஸ் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 140 | 150 |
| தக்காளி | 80 | 80 | 70-90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 100 | 80 |
| கோவா | 60 | 70 | 100 | 120 |
| கரட் | 80 | 170 | 180 | 180 |
| பூசணி | 40 | 50 | 50 | 60 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 260 | 240 | 280 |
| பெரிய வெங்காயம் | 150 | 170 | 130-160 | 180 |
| பாகற்காய் | 200 | 240 | 75-100 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 140 | 160-200 | 160 |
| லீக்ஸ் | 60 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 75 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 240 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 160 | 240 |
| போஞ்சி | 200 | 180 | 140-160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30-40 | 40 |
| தேசிக்காய் | 160 | 200 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | — | 250 |
| வெங்காயப்பூ | 250 | 240 | — | 280 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 80 | — | 120 |




## சிங்கமும் சிறு எலியும்



ஒருநாள் மதிய வேளையில் சிங்கம் ஒன்று காட்டில் தூங்கிக் கொண்டு இருந்தது. அங்கு வந்த எலி சிங்கத்தின் மீது குதித்து விளையாடியது.

இதனால் சிங்கம் விழித்தெழுந்தது கோபம் கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து, "நீ எனக்கு இன்று நல்ல மதிய உணவாக போகிறாய்" என்று கர்ஜித்தது.

ஆனால் எலியோ! சிங்கத்திடம், "என்னை மன்னித்து விடுங்கள் நான் தெரியாமல் உங்கள் மீது ஏறி விட்டேன். என்னை சாப்பிடாதீர்கள்" எனக் கெஞ்சிக் கேட்டது.

சிங்கத்திடம் "இன்று நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டால் என்றாவது ஒருநாள் உங்களுக்கு என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்" என்றது.

சிங்கமோ, "இவ்வளவு சிறிய உடம்பை வைத்துக் கொண்டு எனக்கு நீ உதவ போகிறாயா?" என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போக விட்டது.

சில நாட்களின் பின் சிறிய இறைச்சி துண்டிற்கு ஆசைப்பட்ட அந்தச் சிங்கம் வேடர்கள் வைத்திருந்த வலையில் சிக்கிக் கொண்டது.

வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது.அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு வந்து வலையைத் தன் பல்லினால் வெட்டி சிங்கத்தைத் தப்பி போக உதவியது. சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றி விட்டதே என்று வெட்கப்பட்டு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

**நீதி: உருவத்தை பார்த்து யாரையும் ஏளனம் செய்யக் கூடாது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்




ஜனாதிபதிக்கு அரிஸ்ரோட்டில் மீதான மதிப்பு உயரத் தொடங்கியது. இவ்வளவு சிறந்த புத்திமானை ஏன் தன்னுடைய மருமகனாக்கிக் கொள்ளக்கூடாது? ஜனாதிபதியுடைய சிந்தனை அந்தக் கோணத்தில் இருந்தது.

விடயத்தைச் சொன்னார். முதலில் தயங்கினார் அரிஸ்ரோட்டில். எதிர்காலக் கனவுகள் மனதுக்குள் ஒருமுறை நிழலாடின. சரியென்று தலையசைத்து விட்டார்.

அடுத்த சில நாட்களிலேயே ஜனாதிபதியின் மகளை மணந்து கொண்டார் அரிஸ்ரோட்டில். கரும்பு தின்னக் கூலியும் கொடுத்தார் ஜனாதிபதி.

ஆம், அகாடமி ஒன்றைப் புதிதாக உருவாக்கிக்கொள்ளத் தேவையான நிதி மற்றும் இடம் எல்லாவற்றையும் கொடுத்தார். அதைப் பிளேட்டோ அகாடமியின் குளோனிங் என்றுதான் சொல்ல வேண்டும்.

நிழற்பாங்கான இடம். சிலுசிலுவென காற்று. நிசப்தமான சுற்றுப்புறம். கச்சிதமான குடில்கள். பாடத்திட்டமும் கூட. அதை ஒத்தே இருந்தன. பிளேட்டோவின் கொள்கைகள், தத்துவங்கள், இலக்கண இலக்கியங்கள், பொது அறிவு எல்லாம் சொல்லித் தரப்பட்டன.

அக்கம் பக்கத்து தேசங்களில் இருந்து மாணவர்கள் வந்து தங்கி குருகுலப் பாடம் கற்றுக் கொண்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்தது அரிஸ்ரோட்டிலின் அகாடமி.

அந்தச் சமயத்தில் தான் அது நடந்தது. திடீரென ஒருநாள் ஹெர்மையாஸ் சில பாரசீகர்களால் கொலை செய்யப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைத்தது. அப்படியே ஒடிந்து போனார் அரிஸ்ரோட்டில்.

தன்னுடைய கனவுகள் எல்லாம் சுக்கு நூறாகிப் போனது போல இருந்தது அவருக்கு. அகாடமியைத் தொடர்ந்து நடத்த முடியாத சூழல்.

அகாடமியை நடத்த வெறுமனே எண்ணம் மட்டும் இருந்தால் போதுமா என்ன? நிறையப் பணம், நிறைய ஆதரவு. ஆனால் ஜனாதிபதி இல்லாமல் இரண்டுமே சாத்தியமில்லை.

அகாடமியைக் கலைத்து விடுவதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. கலைத்து விட்டார் தன்னுடைய கனவுகளையும் சேர்த்து. மீண்டும் ஒருமுறை எதிர்காலத்தைப் பற்றிய கவலை.

எதிர்காலம் என்றால்? கனவுகளுடைய எதிர்காலம். பிளேட்டோவின் தத்துவங்களுக்கான எதிர்காலம் கேள்விக் குறிதான். வருத்தமாக இருந்தது. ஆனால் செய்வதற்கு எதுவும் இல்லை.

(தொடரும்)

நாம் இழப்பதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால், ஜெயிப்பதற்கு உலகமே உள்ளது.

– தாமஸ் ஆல்வா எடிசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தனிநாடு கேட்ட தமிழன் தரணியை ஆளுவான் பார்!

உலகின் எந்தப் பக்கம் பார்த்தாலும் தமிழன் இல்லாத இடம் இல்லை எனக் கூறுமளவுக்கு உலகெங்கும் நம் தமிழ் உறவுகள் பரந்து வாழ்கின்றனர்.

உலகில் தமிழர்கள் வாழ்வது என்பதற்கப்பால் கல்வியில், அறிவியலில், நிர்வாகத்தில், மருத்துவத்தில், மெய்ஞானத்தில் தமிழர்கள் உன்னதமாக இருக்கின்றனர் என்பதும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

உலக நாடுகளின் முக்கிய அரசியல் பதவிகளில் நம் தமிழர்கள் வெற்றி பெற்றதான தகவல்களால் எம் இனத்தின் தோள்புயங்கள் உயர்ந்தன.

கனடிய பாராளுமன்றத்தில், மாநகரங்களில் நம்மவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்ற செய்திகளால் உவகை கொண்டிருந்த எமக்கு, அமெரிக்காவின் உப ஜனாதிபதியாக வெற்றி பெற்ற கமலா ஹரிஸ் நம் ஈழத்து மண்ணின் வித்து என்றறிந்தபோது, அடைந்த மகிழ்வுக்கு ஏது எல்லை.

நம் ஈழத்து தமிழ் உறவொன்று அமெரிக்காவின் உப ஜனாதிபதி என்றால் அஃது உலகத் தமிழினத்துக்குப் பெருமை தருவதாகும்.

என்னே அதிசயம். இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கூறித் தமிழினத்தை அழிக்க பேரினவாதம் நினைக்கையில், அமெரிக்காவின் உப ஜனாதிபதி ஈழத் தமிழ் இனத்தின் விழுது என்றால் அது எம் விடியலுக்கான வெள்ளி என்று கூறுவதில் என்ன தவறு உண்டு.

ஆம்! ஒருமுறை தவத்திரு யோகர் சுவாமிகள், தன்னைச் சந்தித்த அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவரின் முதுகில் ஓங்கி அடித்து; இந்தச் சத்தம் அமெரிக்காவில் ஒலிக்கட்டும் என்றார்.

சுவாமிகள் கூறிய திருவாக்கை தன் இதயத்தில் சுமந்து சென்ற அந்த அமெரிக்கர் சிவாய சுப்பிரமுனி சுவாமிகள் எனத் திருநாமம் கொண்டு அமெரிக்காவின் ஹவாயில் யோகர் சுவாமிகளின் பெயரில் ஆச்சிரமம் அமைத்தார்.

தவத்திரு யோகர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வாக்கு ஹவாயில் நிறைவுற்றது என்றால், இல்லை.

அமெரிக்காவின் உப ஜனாதிபதியாகவும் அந்தச் சத்தம் ஒலித்திருக்கிறது.

சோல்பரி பிரபுவின் மகன் போதம் யோகர் சுவாமிகளின் காலடியில் கிடந்தார். சுவாமிகள் நினைத்திருந்தால் அன்றே தனிநாட்டை அவர் பெற்றிருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

தமிழன் தனிநாடு, கேட்டால்தான் தரணி ஆளுவான் என்பதாலோ என்னவோ சுவாமிகள் அன்று மௌனமாய் இருந்தார்.

அவரின் மௌனத்தின் பொருள்தனை கமலா ஹரிஸ் தந்து நிற்கிறார்.

நிச்சயம் ஈழத் தமிழன் உலக நாடுகளின் ஆளும் பதவிகளில் இருப்பான்.

அப்போதுதான் தாங்கள் விட்ட தவறை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்வர். இது சத்தியம்.

## மனைவியிடம் குழந்தையைத் தருமாறு கேட்டதால் சந்தேகத்தில் அடித்துக் கொன்றேன்

### மன்னார் கிராம சேவகர் கொலை தொடர்பில் பிரதான சந்தேக நபர் தெரிவிப்பு

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலகர் மீது கொண்ட சந்தேகம்தான் அவரைக் கொலை செய்வதற்கு காரணம் என்று பிரதான சந்தேக நபர் தெரிவித்துள்ளார். தனது இரட்டை குழந்தைகளில் ஒன்றை வளர்க்கத் தருமாறு, மனைவியிடம் அவர் அடிக்கடி கேட்டது, தனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.இதன்போது, அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சந்தேக நபருக்கு எதிராக அவருடன் சம்பவ இடத்தில் நின்ற இளைஞன் அரச சாட்சியாக மாறியுள்ளார் என்று நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமையாற்றும் விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன் (வயது-55) என்பவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் இலுப்பக்கடவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். விசாரணையில்,

அரிசி ஆலை ஒன்றை அமைப்பதற்காக பெண் கிராம அலுவலர், நிர்வாக கிராம அலுவலரிடம் 10 இலட்சம் ரூபாய் பணத்தை கைமாற்றாக வாங்கியுள்ளார்.

அரிசி ஆலையில் வேலைக்கு என இளைஞர் ஒருவரை சந்தேக நபர் அழைத்து வந்து வைத்திருந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று சந்தேக நபர் இளைஞனையும் அழைத்துக் கொண்டு சென்று, நிர்வாக கிராம அலுவலரை மண்வெட்டியால் தாக்கியுள்ளார்.

நிர்வாக கிராம அலுவலரை அம்புலன்ஸ் வந்து ஏற்றிய போது முச்சக்கர வண்டியில் வந்து இறங்கிய சந்தேக நபர், நோட்டமிட்டுள்ளார். அங்கு கூடியிருந்தவர்கள் கிராம அலுவலர் வெட்டப்பட்டுள்ளார் என்று தெரிவித்த போது, 'இல்லை இல்லை அவருக்கு யாரோ கட்டையால் அடித்துள்ளனர்' என்று சந்தேக நபர் கூறியுள்ளார்.

மறுநாள் இலுப்பைக் கடவை இரகசிய பொலிஸ் உத்தியோகத்தர்களை தனது முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று விசாரண்ண நடவடிக்கைகளுக்கு உதவுவதாக பாசாங்கு செய்துள்ளார்.

இந்த நிலையிலேயே இரண்டு தினத்திற்கு முன்னர் சந்தேக நபரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அவரது வீட்டில் வேலைக்காக தங்கியிருந்த இளைஞனை அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

அந்த இளைஞன் நடந்தவற்றை கூறியதால் பெண் கிராம அலுவலரின் கணவரை கைது செய்தனர் பொலிஸார்.

கொலைக்குப் பயன்படுத்திய மண்வெட்டி பிடி மற்றும் உடை ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட குருதிக் கறையுடனான மரத் துண்டு மண்வெட்டிப் பிடியில் உடைந்த பகுதியோடு பொருந்தியுள்ளது.

இந்த நிலையில் முதலாவதாகக் கைது செய்யப்பட்ட இளைஞன் அரச சாட்சியாக மாறுவதற்கு சம்மதித்ததால் சந்தேக நபருக்கு எதிரான வழக்கை விரைந்து முடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** மணற்காடு, அம்பன், குடத்தனை, பொற்பதி, அம்பன் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** வைரவப் புளியங்குளம், பண்டாரிக்குளம் கிராமம். குளோப் அரிசி ஆலை. கோவில் குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, Union Alliance Limited, ஓமந்தை Senok Trade, ஓமந்தை Technical College, ஓமந்தை AMP Ceylon Private Limited ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## நினைவேந்தலுக்கு அழைப்பு

(குப்பிழான்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் சாவகச்சேரி நகரிலுள்ள ரவிராஜ் உருவச் சிலைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கட்சி பேதமின்றி கலந்து கொள்ளுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார். (5-4-18)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."

-மூப்பர் அம்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எது செய்தாலும் பலன் நமக்கே



❖ கடவுள் பிரமாண்டமான பெரிய வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் மையம், எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்து இருக்கிறது. அந்த மையம் தான் மனிதன்.

❖ நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்த ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவி செய்வது தான்.

❖ கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

❖ தன்னலமற்ற மனப்பான்மை தான் ஆன்மிக வாழ்வின் அடிப்படை. இதைக்கொண்டே ஒருவரின் ஆன்மிகத் தேடுதலை சோதிக்க வேண்டும். சுயநலம் இல்லாதவனே, ஆன்மிக வாழ்க்கையைப் பெற்றவனாகிறான்.

❖ தீமையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதனால், நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்து கொள்கிறோம்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## ஆறில் வந்தது குரு பகவான், ஆயினும் ராஜயோகம் உண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சிம்ம இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று 6 ஆம் இடத்திற்கு வருகின்றார். '6 இல் குரு வந்தால் ஊரில் பகை' என்பார்கள். ஆனால் உங்களைப் பொறுத்தவரை, உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் குரு பகவான். 8-க்கு அதிபதியான குரு பகவான், 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப, ராஜயோகம் தரக்கூடிய விதத்திலேயே கிரகங்கள் செயற்படப் போகின்றது. எனவே உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகளும் ஒருசிலருக்கு அமையும். இடையில் குரு 7ஆம் இடத்திற்குச் செல்கின்றார்.

வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு யோக வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். ஏதேனும் இடர்பாடுகள் வருமேயானால் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து, குரு பகவானை வழிபடுவதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். குருவின் பார்வை 2ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

இப்பொழுது மனதிற்கு பிடித்த வரன்கள் வந்து மகிழ்ச்சியோடு சுபகாரியம் நடைபெறப்போகின்றது. தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். வியாபாரம் வெற்றிநடை போடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே பணிநிரந்தரம் அமையும். பதவி உயர்வும் கிடைக்கும்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் முத்தான தொழில்கள் வாய்க்கும். முன்னேற்றம் அதிகரிக்கும். 'தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு மூலதனம் கிடைக்கவில்லையே' என்ற கவலை இனி அகலும். ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அடுக்கடுக்காக வந்து கொண்டேயிருக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு திடீரென பொறுப்புகள் வரலாம்.

குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நீண்டதூரத்தில் பணிபுரியும் உறவினர்கள், உங்கள் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவர். பெற்றோர்களின் மணிவிழா, முத்துவிழா, பவளவிழா போன்ற விழாக்களும், பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகளும், கெட்டி மேளம் கொட்டும் வாய்ப்பும், குருவின் பார்வையால் வந்து சேரும். மாற்று மருத்துவம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ள வழிகாட்டும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு வியப்பர். சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். கேட்ட இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 04.01.2021 வரை)**

உங்கள் இராசிநாதன் சூரியன் ஆவார். அவரது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார பற்றாக்குறை அகலும். புகழ்மிக்கவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் தொடர்பு ஏற்படும். தடமாறிய தொழில் இனி வீறுநடை போடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கூட்டு முயற்சியில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும்.

இப்பொழுது சூரிய பலத்தால் கோபம் அதிகம் வரலாம். அதன் விளைவாக முன்னேற்றப் பாதையில் சில சறுக்கல்களும் வந்து சேரும். அனுபவஸ்தர்கள் மற்றும் ஆன்மிகப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம், நல்ல பலன்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01.2021 முதல் 01.03.2021 வரை)**

சந்திரன், உங்கள் இராசிக்கு விரயாதிபதி ஆவார். எனவே விரயங்கள் அதிகரிக்கலாம். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் எதிர்பாராத விதத்தில் அமையும். பயணங்கள் அதிகரிக்கும். எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். இல்லத்தில் இதுவரை நடைபெறாத சுபகாரியங்கள் நடைபெறும். பிள்ளைகளின் மேற்படிப்பு தொடர நீங்கள் செய்யும் ஏற்பாடுகள் வெற்றிபெறும்.

நண்பர்கள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவர். என்ன இருந்தாலும் சந்திர சாரம் என்பதால் மனஉறுதியுடன் உங்களைச் செயற்பட விடாது. தீட்டிய திட்டங்கள் திசைமாறியும் செல்லும். ஒரு சில காரியங்கள் நினைத்ததற்கு மாறாக நடந்தாலும் கடைசியில் நல்ல விதமாக முடியும். தங்கு தடைகள் ஏற்படாமல் இருக்க பௌர்ணமிவழிபாடு உங்களுக்கு பலன் தரும்.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம்**




**(02.03.2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.9.2021 முதல் 13.11.2021 வரை)**

இக்காலத்தில் யோகங்கள் அதிகமாகவே வந்து சேரும். இடம், பூமி விற்பனையால் ஆதாயம் கிடைக்கும். என்றைக்கோ விலை மலிவாக வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது பலமடங்காக விலை உயர்ந்து ஆச்சரியத்தில் ஆழ்த்தும். ரியல் எஸ்டேட் மற்றும் கட்டட வல்லுநர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

எதிரிகள் விலகுவர். வாழ்க்கைத் தேவைகள் படிப்படியாகப் பூர்த்தியாகும். உங்கள் இராசிக்கு சுகஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செவ்வாய் அதிபதியாக விளங்குவதால், முன்னோர் வழி சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். பட்டா மாறுதல், சிட்டா மாறுதல் என்று இழுத்தடித்த நிலப் பிரச்சினை இனி எளிதில் முடியும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்வர்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக் காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (05.04.2021 முதல் 13.09.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவர் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. 'குரு பார்க்க கோடி நன்மை' என்பதால் இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து கொண்டே இருக்கும். உள்ளமும், உடலும் ஆரோக்கியமாக அமையும்.

உதாசீனப்படுத்தி உங்களைவிட்டு விலகிச்சென்றவர்கள் தானாகவே வந்திணைவர். தொழில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். மேலும் குருவின் பார்வை 3, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே உடன்பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்கும் குருவால், நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. வீண் விரயங்களும், மனக்கவலைகளும் அதிகரிக்கும். இக்காலத்தில் சிறப்புப் பரிகாரங்களை செய்துகொள்வதன் மூலம் செய்தொழிலில் எதிர்பார்த்த இலாபத்தைப் பெறமுடியும். விரயத்தை, சுபவிரயமாக மாற்றும் முயற்சியில் ஈடுபடலாம். குறிப்பாக பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க சீர்வரிசைப் பொருட்களை வாங்கிச் சேர்க்கலாம். மேற்படிப்பு படிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யலாம். தடமாற்றங்கள் அகல இடமாற்றங்கள் கைகொடுக்கும். இக்காலத்தில் யாருக்கேனும் பொறுப்பு சொல்லி, தொகை வாங்கிக் கொடுத்தால் சிக்கல்கள் உருவாகலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சூரியன் படம் வைத்து, ஆதித்ய கவசம் பாடி வழிபடுவது நல்லது. வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு கவசம் பாடி, குரு பகவானை வழிபடுவதன் மூலம் உங்கள் எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குருப்பெயர்ச்சி நன்மை தரும் விதத்திலேயே இருக்கின்றது. உடல்நலம் சீராகும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். தாய் வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் உங்கள் வாழ்க்கை அமையும். குருவின் வக்கிர காலம் தவிர மற்ற காலங்களில், உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு பாராட்டும் கிடைக்கும். கேட்ட சலுகைகளைக் கொடுக்க மேலதிகாரிகள் முன் வருவர்.

(தொடரும்)

## ஒரு மாதமேயான...

ழுந்துள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி மேற்குப் பகுதியில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அஜந்தன் அக்சயன் என்ற ஒரு மாதமேயான ஆண் குழந்தையே உயிரிழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை தாய்ப்பால் புரைக்கேறிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக குழந்தை அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது. (ம-3,60)

## எதிர்வரும் 23...

நாடு முழுவதும் கொரோனா பரவல் அபாயம் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் 23ஆம் திகதி அரச பாடசாலைகள் அனைத்தும் திறக்கப்படுவதாகவும், மாணவர்களை ஒரே நேரத்தில் பாடசாலைக்கு அழைக்காமல் இரு கட்டங்களாக அழைப்பதெனவும், சகல பாடசாலைகளும் கிருமி நீக்கம் செய்த பின்பே பாடசாலைகளை ஆரம்பிப்பதென ஆராயப்பட்டுள்ளது.

எனினும் 23ஆம் திகதியை அண்மித்த நாட்களில் நாட்டில் உள்ள கொரோனா இடர்நிலைமையினை கருத்தில் கொண்டு முடிவுகள் மாறலாம் என வும் தெரிவித்துள்ளார். (ம-3)

## முகக் கவச...

பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வரவேற்பு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் முகக்கவசம் அணியாது அதில் கலந்து கொண்டுள்ளார்.

இதன்போது குறித்த வரவேற்பில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன முகக்கவசம் அணியவில்லை என்பதை வட மாகாண ஆளுநருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து அவர் உடனடியாக அவரின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தரை வரவழைத்து முகக்கவசம் எடுத்து வருமாறு பணித்து அதன் பின்னர் முகக்கவசத்தினை அணிந்துள்ளார். (ம-3,250)

## மண்டைதீவில்...

மகன் ஒருவரின் காணி அளவீடு செய்யப்படவுள்ளது.

மண்டைதீவு மூன்று சந்திப் பகுதியிலுள்ள கால் ஏக்கர் காணி இன்று காலை 8.30 மணிக்கு அளவீடு செய்யப்படவுள்ளது.

தனிநபருக்கு சொந்தமான இந்த காணியை, கடற்படையினரின் தேவைக்காக நிரந்தரமாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்த இன்று போராட்டமொன்றை நடத்தவுள்ளதாக வலி.வடக்கு உறுப்பினர் எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுள்ளார். (ம-3)

## சர்வதேச தரம்...

வாய்ந்த மைதானமாக விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தினை நேற்று திங்கட்கிழமை காலை பார்வையிட்டதுடன் விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3,18)

## கொரோனா...

தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர்.

இலங்கை போக்கு வரத்துச் சபையின் சாரதியாகப் பணிபுரிந்த 56 வயது நபர் நேற்று முன்தினம் அகலவத்தையில் தூக்குப்போட்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஜா - எலவில் வசிக்கும் 72 வயதான பெண் ஒருவரும் கடந்த சனிக்கிழமை தனது இல்லத்தில் தூக்குப்போட்டு உயிரிழுந்துள்ளார். (ம-3)

## கொரோனாவை...

நேரம் நாட்டை வழமை போன்று பேணிச் செல்வதாகும்.

நாம் மூன்றாவது மாற்றுவழியை தெரிவு செய்திருக்கின்றோம்" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆரம்பத்தில் கோவிட் நோய்த் தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதன் பின்னர் ஊடகங்களும் மக்களும் அனைத்தையும் மறந்துவிட்டதும் பொறுப்பை தவறவிட்டதும் தற்போதைய நிலைமைக்கு காரணமாகும்.

நோய்த்தொற்று உலகிலிருந்து ஒழிக்கப்படும் வரை நாட்டை மூடி வைக்க முடியாது. யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

மக்கள் இந்த நிலைமையை புரிந்து கொண்டு நோய்த்தொற்றுக்கு ஆளாவதிலிருந்து தவிர்த்திருப்பது அவர்களது தனிப்பட்ட பொறுப்பும் கடமையுமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-3)

## இளம் குடும்பஸ்...

வீடொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய நிர்மலன் ஆதித்தன் ஆவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கீரிமலையில்...

லைச் சேர்ந்த 20 வயதுடைய பாலசுப்பிரமணியம் நிபோஜனா என்பவராவார்.

குறித்த யுவதி கடந்த 29ஆம் திகதி அதிக வாந்தி எடுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## 36...

களின் எண்ணிக்கை 36 ஆக உயர்வடைந்துள்ளது.

84 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழுந்துள்ளார்.

அர சாங்கத் தகவல் திணைக் களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் நாட்டில் நேற்றும் 321பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப் பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டில்கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்தைக் கடந்து 14 ஆயிரத்து 285 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## முல்லைத்தீவு பகுதியில் துப்பாக்கியுடன் சிறுவன் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துணுக்காய்ப் பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 17 வயது சிறுவனொருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

மல்லாவிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## குடும்பஸ்தரின்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் திருநெல்வேலியைச் சேர்ந்த 53 வயது டைய செல்லத்துரை கலாமோகன் என்பவராவார்.

இவரது மனைவி, பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ள நிலையில் இவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

இதன்போதே நேற்று முன்தினம் குறித்த நபர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1629 திகதி 2020/11/09

ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 43 45 51 53

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 09/11/2020

சீட்டிழுப்பு இலக்கம் 0668

A 21 08 18 23 29

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 09-11-2020

சீட்டிழுப்பு இலக்கம் 2596

D 07 15 16 39

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2020/11/09

சீட்டிழுப்பு இலக்கம் 4301

G 6 6 9 7 3 4

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 09/11/2020 சீட்டிழுப்பு இலக்கம் - 340

D 06 47 50 63

2 5 4 6

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1271 நிறம் ஊதா

சீட்டிழுப்பு திகதி 09.11.2020 தினம் திங்கள்

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்

B 27 34 39 77

SUPER 500 5 8 4 2

அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி

சுப்பர் ஜக்பொட் 4,787,838/=

திகதி : 09.11.2020 வெற்றி வாரம் : 2978 வர்ணம் : மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் 15 17 37 42 கன்னி

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,882,980

### அத கோடிபதி ADA KOTIPATHI

திங்கட்கிழமை

சீட்டிழுப்பு இல: 1097 வர்ணம் : சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 2020.11.09

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 82,930,290/-

வெற்றி இலக்கங்கள் 25 36 66 73 I

### சனிதா

திங்கட்கிழமை

சீட்டிழுப்பு திகதி: 2020.11.09 சீட்டிழுப்பு இல.: 3427 வர்ணம் : நீலம்

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,566,403.50

வெற்றி இலக்கங்கள் 31 37 39 40 E

ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4037

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1705 சீட்டிழுப்பு திகதி 09/11/2020

வெற்றி இலக்கங்கள் 13 21 39 43 D

எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,748,124

தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

# யாழில் நேற்று 259 பேருக்கு கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை 259 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வடக்கு மாகாணத்தில் புதிதாக எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, நெடுங்கேணிப்பகுதியில் நேற்று முன்தினம் உயிரிழந்தவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-03,18)

# அத்தியாவசிய தேவையில்லாமல் கொழும்புக்கு செல்வதை தவிருங்கள்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

நாட்டில் தற்போதைய சூழலில் மிக மிக அத்தியாவசிய தேவையில்லாமல் கொழும்புக்கு செல்வதை முற்றாக தவிர்க்குமாறு இராணுவ தளபதியும், கொரோனா எதிர்ப்பு செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், நாட்டில் அதிகளவான நோயாளர்கள் கொழும்பு, ஹம்பகா மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். எனவே மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

மேலும் கொழும்பு, ஹம்பகா மாவட்டங்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்ந்தும் கண்டுபிடிக்கப்படுகின்றார்கள். எனவே நாட்டின் எந்த பகுதியிலும் கொரோனா தொற்று அபாயம் உள்ளது என்பதை மக்கள் உணரவேண்டும்.

எனவே சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பூரணமாக கடைப்பிடிப்பதுடன், மாவட்டங்களுக்கிடையில் மிக மிக அத்தியாவசிய தேவை என்றால் மட்டும்பயணிக்குமாறும், தேவையற்ற பயணங்களை முற்றாக தவிர்ப்பதே சிறந்தது என அவர் மேலும் கூறியுள்ளார். (ம-03)

# இந்தியாவிற்கு தப்பிச் செல்வதற்கு படகு வழங்கிய உரிமையாளரின்

## குடும்பம் தனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பகுதியில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் இந்தியாவிற்கு தப்பிச் செல்வதற்கு படகு வழங்கிய உரிமையாளரின் குடும்பத்திலுள்ள ஐவர் நேற்று திங்கட்கிழமை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறைப் பகுதியில் இருந்து இந்தியாவிற்கு மூவர் தப்பிச் சென்ற நிலையில் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் வல்வெட்டித்துறையில் இருந்து தப்பிச் செல்வதற்கு படகினை வழங்கிய உரிமையாளர் மற்றும் வீட்டில் உள்ள ஐவர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-03,60)

# கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்ய ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டு மரணமடையும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சர் அலி சப்றி ஜனாதிபதியிடம் இது தொடர்பாக எடுத்துரைத்த போதே ஜனாதிபதி இது தொடர்பான அனுமதியை வழங்கியுள்ளார்.

இவ்வாறு கொரோனா தொற்றால் இறக்கும் முஸ்லிம்களின் உடல்களை முதல் கட்டமாக மன்னார் பிரதேசத்தில் இடமொன்றை ஒதுக்கி அடக்கம் செய்வதற்கு ஆராயப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியானதன் பின்னரே இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)

# இலங்கை கடல் எல்லையை கடக்க ஒத்துழைப்பு வழங்கியவர்

## கைதாகி மறியலில்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் இலங்கை கடல் எல்லையை கடப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நபரை இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தைச் சேர்ந்த திருமதி சைலவன் காயத்திரி நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

சில தினங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து இந்தியாவுக்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தப்பிச் சென்றிருந்தனர். அவர்களை சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பை தாண்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தொண்டைமானாற்றைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை(09) காலை வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித் துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போதும் அவரை இம்மாதம் 18ஆம் திகதி வரை தனிமைப்படுத்தி விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-03,60)


**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, நாயன்மார்க்கட்டு கேணியடியில்
12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4599)
076 436 5814, 074 075 4204

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், பலாலி றோட், கோண்டாவிலில்
1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
( கோண்டாவில் சந்திக்கு அருகாமை )
(4599)
076 888 4625, 077 505 8561

**வீடு விற்பனைக்கு உண்டு**

பிரம்படி 2 ஆம் ஒழுங்கை கொக்குவிலில்
2 பரப்புக் காணியில் அமைந்த வீடு
விற்பனைக்கு உண்டு.
2 1/2 பரப்புக் காணி பிரம்படி லேன் 2ஆம்
ஒழுங்கையில் வெட்டுக்கிணற்றுடன்
விற்பனைக்கு உண்டு.
(4597)
076 702 3565

**பணியாளர்கள் தேவை**

வடக்கின் முன்னணி கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு பணியாளர்கள் தேவை.

- கணக்காளர் (பெண்)
- படவரைஞர் (Draftsman) (பெண்/ஆண்)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)

சுயவிபரக் கோவையை 12.11.2020 இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு Vtsentha@gmail.com இற்கு அனுப்பி வைக்கவும்.
(4594)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், ராச வீதியில் 6 பரப்புக் காணி
(மெயின் றோட்டுடன்) விற்பனைக்கு உண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.
யாழ்ப்பாணம், நீர்வேலி, கரந்தன் குறுக்கு வீதியில்
2 பரப்பு, 3 குளி காணி (ராசா கடை அருகாமை)
விற்பனைக்கு உண்டு. மற்றும் 44 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4599)
077 805 1655
076 640 0974

**அறைகள் வாடகைக்கு**

நாவலர் வீதி TCT முன்பாக
பல்கலைக்கழக மாணவிகளுக்கு
அறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.
(4592)
077 515 1352

**இன்றுடன் பதிவுகள் நிறைவடைகின்றன**

**அமெரிக்க அதிஸ்ட விசா**



2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
55000 இலவச விசாக்கள்
0768226244
கடந்த காலங்களில் வெற்றிகரமாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அப்பா V2 Travels இல் அமெரிக்க லொத்தர் விசா பதிகின்றார்கள் நானும் விண்ணப்பம் போடலாமா? என மகன் கேட்டபோது ஐயா எங்களுக்கெல்லாம் வெளிநாடு செல்ல கொடுப்பனை இல்லை ஆனாலும் உங்களுக்கு விருப்பம் இருந்தால் பதியுங்கோ என்று அனுமதி கொடுத்தேன். சிறிது காலத்தின் பின் நான் கடற்கரையில் நின்றபோது சந்தோசமாக வந்த மகன் தனக்கு அமெரிக்க விசாவிற்கான அதிஸ்டம் கிடைத்துள்ளது என சொன்னபோது எனக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது நாம் கனவிலேகூட நினைத்து பார்த்திருக்காத வெளிநாடு செல்லும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த V2 Travels இக்கு எமது நன்றிகள்.
(C-505)



அமெரிக்கா விசா வெற்றியாளர் கஜேந்திரனின் தந்தை
V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-505)

**குங்குமம் திருமாங்கல்ய சேவை**

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய
சேவையினூடாக உங்கள் பிள்ளை
களின் மணவாழ்வினை மங்கல
வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.
(4588)
077 572 9724, 076 788 9697

**தரமான முறையில் மாபிள் பதித்து கொடுக்கப்படும்.**
(C-648)
A. ஜீவா - 077 187 6805


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.